விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 292 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 20 ஞாயிற்றுக்கிழமை (06.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# சிறீதரனும் சுமந்திரனும் தேர்தலில் சேர்ந்து போட்டி

## தமிழரசுக் கட்சி தீர்மானம்



(வவுனியா)

சிறீதரனும் சுமந்திரனும் பொதுத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் சேர்ந்து போட்டியிடவுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறைவேற்றுக்குழுவில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை வெற்றி

03ஆம் பக்கம் பார்க்க

## தண்ணீர் போத்தலுக்கு கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)

சந்தையில் தற்போது 100 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் 500 மில்லி லீற்றர் தண்ணீர் 19

## ஜனவரி மாதம் முதல் வாகன இறக்குமதி

### அரசாங்கம் பரிசிலனை

(கொழும்பு)

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாகன இறக்குமதிகளுக்கு அனுமதியை வழங்குவது குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பரிசீலித்து வருவதாக 19

## புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதே நோக்கம்

### மஹாநாயக்க தேரரிடம் ஜனாதிபதி அநுர குமார



(கொழும்பு)

நாட்டை ஓரளவு ஸ்திரப்படுத்தி மக்கள் எதிர்பார்ப்புக்கு அமைய புதிய அரசியலமைப் பொன்றை கொண்டுவர எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மஹாநாயக்க தேரரிடம் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் விபரீத முடிவெடுத்த 14 வயது சிறுவன் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் புதுக்குடியிருப்பில் விபரீத முடிவெடுத்த 14 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரம் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் 19

## பொதுத் தேர்தலின் பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட அனைத்தும் நிறைவேற்றப்படும்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட அனைத்துத் தீர்மானங்களையும் மேற்கொள்வதே எமது தீர்மானம். பொதுத் தேர்தலின் பின்னர் அது தொடர்பான உரிய மறுசீர 19

## முன்னணி வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையொப்பம்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக யாழ் - கிளிநொச்சி தேர் 19

## மறுசீரமைப்பை தொடர்வதில் அரசாங்கம் அர்ப்பணிப்பு

### மகிழ்ச்சி வெளியிட்ட ஐ.எம்.எப்

(கொழும்பு)

மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஐ.எம்.எப் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய, பசுபிக் திணைக்களத்தின் 19

## பெண் வேட்பாளர்களை தேடுகின்றோம்

### எம்.ஏ.சுமந்திரன்



(வவுனியா)

பெண் வேட்பாளர்களை அடையாளம் காணுவது கடின 19

## இரு வாரங்களில் பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

நாட்டில்எதிர்வரும்இரண்டு வாரங்களில் பொருட்களின் விலை குறைவடைவதற்கான வாய்ப் 02

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடியில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்**

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00- மாலை 6.00
- தரகர் தேவையில்லை

(2209)

**070 168 3354**
**070 668 3354**


## இரு வாரங்...

புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்தது ள்ளமையினால், அதன் பலனை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்கவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, பொருட்களின் விலைக் குறைப்பு தொடர்பான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பாக பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-7)


## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள மணிக்கூடு, இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு வேலை ஆட்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்)

(2227)

**077 327 6285, 074 103 6285**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராயில் 24 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்**

- 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட 20 அடிப் பாதையுடன்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற்வீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை

(2209)

**077 288 0152, 076 739 0413**

## செம்மொழி கல்வியகம் தாவடி

தாவடி பாடசாலை அருகில்

**O/L தமிழ்**

தமிழ்ப் பாடத்தில் F,W,S எடுத்த மாணவர்களுக்கான விசேட வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

(12.10.2024
விஜயதசமி அன்று)

(2210)

ஆ.பிருந்தாபன்
**077 255 0807**

## PickMe யாழ்ப்பாணத்தில்

நீங்கள் வைத்திருக்கும் CAR/ VAN/ Lorry/ Motorcycle அனைத்தையும் PickMe Taxi சேவையில் இலவசமாக இணைத்து அதிக வருமானம் பெறலாம்.

(403)

**077 473 7737**
அழைக்கவும்.

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் சுப்பர்மார்க்கட்டுக்கு வேலையாட்கள் தேவை.


- காசாளர் - கணினி தெரிந்தவர்கள் ஆண், பெண் இருபாலாரும்
- பொதி செய்பவர்கள் - பெண்கள்

(228)

தொடர்பு : **077 355 1631**
T.T.R.Supermarket
85,87, Rakka Road, Jaffna.


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை குணலிங்கம்



தோற்றம் 29.05.1940 மறைவு 04.10.2024

கொம்மந்தறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை குணலிங்கம் அவர்கள் 04.10.2024 வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - இராசம்மா தம்பதியினரின் கனிஷ்ர புத்திரனும் அழகையா - பூமணி தம்பதியினரின் மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் ஜெகதாஸ் (லண்டன்), றஜினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - பருத்தித்துறை), றகிதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கார்த்திகா (லண்டன்), அன்ரனி மைக்கல்(கொழும்பு), நிஸந்தி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரவீன்(இறுதிவருட மாணவன் - முகாமைத்துவபீடம் - பேராதனைப் பல்கலைக்கழகம்), சறோன்(2ம் வருட மாணவன் பொறியியல் பீடம் - ஜெயவர்த்தன பல்கலைக்கழகம்), யஸ்வினி (விஞ்ஞானப்பிரிவு மாணவி A/L 2024 யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சஞ்சீவ்(Automative Engineering 3 rd year, லண்டன்), பிருந்தன் (Mechanical Engineering, 1 st year, லண்டன்), யரூஸ் (லண்டன்), அனீஸ், அஸ்வின்(சுவிஸ்) அமரர்களான தர்மலிங்கம், சாந்தலிங்கம், தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இலட்சுமியம்மா (அமரர்), பாலேந்திரன்(அமரர்), சடாட்சரதேவி, இராசகுலசிங்கம் (ஜேர்மன்), தர்மகுலசிங்கம்(சுவிஸ்), பிறேமகுலசிங்கம்(அமரர்), மங்கையர்திலகம், மங்கையர்ரமணி(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.10.2024 நாளை திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாடசாலை வீதி,
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

(401)

## மரண அறிவித்தல்

### திருமதி வரலட்சுமி தயாபரன் (வரதா)

(சிரேஸ்ட முன்பள்ளி ஆசிரியை – சாலோம் நகர் புதுமுறிப்பு, கிளிநொச்சி)



மண்ணில் 19.02.1964 விண்ணில் 04.10.2024

வடமராட்சி அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், சாலோம் நகர், புதுமுறிப்பு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரலட்சுமி தயாபரன் அவர்கள் 04.10.2024 அன்று இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - சிவமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகளும் தயாபரன்(ரவி)- (தனியார் பேருந்து உரிமையாளர்- கிளிநொச்சி முழங்காவில் சாலை) அவர்களின் அன்பு மனைவியும் ஜெனீதக்ஷயன் (உத்தியோகத்தர் HNB Finance - கிளிநொச்சி), ஜெஸ்னோலக்ஷயன் (1ம் வருட மாணவன் - முகாமைத்துவபீடம் - யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மணிவாசகன் (அல்வாய்), மணிவண்ணன்(லண்டன்), இராதாமணி(அரியாலை), மணிமாறன் (ஜேர்மனி), சீதாமணி(உத்தியோகத்தர், கரைச்சி பிரதேச சபை உப அலுவலகம்- கண்டாவளை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கௌரி(அல்வாய்), வளர்மதி(லண்டன்), காலஞ்சென்ற அரசகேசரி (பிரதம எழுதுவினைஞரும் மேலதிக மாவட்ட காணிப் பதிவாளரும் - மாவட்டச் செயலகம்-கிளிநொச்சி) மற்றும் ஜெகதீஸ்வரி(பாமா- ஜேர்மனி), உமாசங்கர்(ஓய்வு நிலை உபஅதிபர் - கிளி/இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற ரவிக்குமார் மற்றும் ஜெகதீஸ்வரன், கேமராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (06.10.2024) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊற்றுப்புலம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாற்பண்ணையடி,
சாலோம் நகர், புதுமுறிப்பு,
கிளிநொச்சி.

076 937 4725

தகவல்: கணவர் மற்றும் பிள்ளைகள்

(400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் வெற்றி

## நிதியமைச்சு அறிவிப்பு

**(கொழும்பு)**

**இலங்கையின் உத்தியோகப்பூர்வ கடன்வழுங்குநர் குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.**

நிதியமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஜூன் மாதம் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடனும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடனும் இணக்கம் காணப்பட்ட விடயங்களும் உத்தியோகபூர்வ கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கையில் அடங்கியுள்ள விடயங்களும் சர்வதேச நாணய நிதிய நிபந்தனைகளுக்கு அமைவானது என்பதனை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அறிவித்துள்ள திட்டங்களுடன் தொடர்புடைய கடன் இலக்குகள், இணக்கப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கு அமைவாக சர்வதேச இறையாண்மை முறிகளை மறுசீரமைப்பதற்கும் அனுமதி கிடைத்துள்ளதாக நிதியமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இலங்கை-இஸ்ரேல் விமான சேவைகள் மீண்டும் ஆரம்பம்



(கொழும்பு)

இலங்கைக்கும் இஸ்ரேலுக்குமான விமான சேவைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

ஈரான் - இஸ்ரேல் மோதல் காரணமாக விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் மீண்டும் இடம்பெறுகின்றன.

எவ்வாறாயினும் தற்போதைய நிலையில் மீண்டும் மோதல் அதிகரிக்குமாயின் விமான சேவைகள் இரத்துச் செய்யப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். (நி)

## கெஹெலிய உட்பட

# 6 பேரின் சொத்துக்கள் தொடர்ந்தும் முடக்கம்

(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உட்பட 6 பேரின் நிலையான வைப்புக்கள் உள்ளிட்ட சில சொத்துக்களை தொடர்ந்தும் 3 மாதங்களுக்கு முடக்குவதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் விசாரணைக்கு அமைய கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதற்கமைய முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் சிலரின் வங்கிக்கணக்குகள் ஆயுள் காப்புறுதிகளை இடைநிறுத்தி உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னதாக கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் 16 வங்கிக்கணக்குகள் உட்பட 5 ஆயுள் காப்புறுதிகளை இடைநிறுத்தி உத்தர விடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி வரை 16 வங்கிக்கணக்குகள் உட்பட 5 ஆயுள் காப்புறுதிகளை தொடர்ந்து இடைநிறுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (நி)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.கலாநிதி. பசுபதி இராசேந்திரம் (J.P)

பசுபதி இராசேந்திரம் அவர்கள் ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஞான வைரவர் ஆலயத்தின் பரிபாலன சபையில் நீண்ட காலமாக செயலாளராக இறைபணி ஆற்றியுள்ளார். அதேபோன்று ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையத்தின் ஆரம்பகால தலைவராகவும் நீண்டகாலமாக சேவையாற்றியிருந்தார். அகில இலங்கை சமாதான நீதவானாக சேவை புரியும் இவருக்கு ஐக்கிய இயற்கை சர்வதேச சமாதான நிறுவனம் AL BASSAM பல்கலைக் கழகத்துடன் இணைந்து சமூக சேவைக்கான கௌரவ கலாநிதிப்பட்டம் கடந்த 18.08.2024 ஞாயிறு அன்று யாழ்.உரும்பிராய் கற்பக இராஜேஸ்வரி மண்டபத்தில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ அரவிந்தகுமார் அவர்களினால் கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு அவரது சேவை தொடர வேண்டுமென எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

(2213)

வாழ்த்துவோர்: நாவலம்பதி ஞானவைரவர் ஆலயம்,
ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையமும்
அதன் உப அமைப்புக்களும்.


## காங்கேசன்துறை துறைமுகம்

# நவீனமயமாக்கும் நடவடிக்கைக்கு நிதியுதவி வழங்கும் இந்தியா



(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப் படவுள்ள முதலீடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கலந்துரையாடியுள்ளார்.

இதன்படி காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமயமாக்கும் நடவடிக்கைகளுக்காக 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை இந்தியா வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை தொடருந்து திணைக்களத்துக்கு 22 டீசல் இயந்திரங்களைப் பரிசாக வழங்குவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எரிசக்தி, வலுசக்தி, சுகாதாரம், சுற்றுலா, பால்வள மேம்பாடு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இலங்கைக்கான விஜயத்தின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடியுள்ளதாக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## எதிர் அணி வீரரை கடித்த

### கால்பந்து வீரருக்கு ரூ.16 லட்சம் அபராதம்




பிரெஸ்டன் வீரரான மிலுடின் ஒஸ்மாஜிக் கடந்த 22 ஆம் திகதி நடந்த ஆட்டத்தில் பிளாக் பர்ன் பின்கள வீரர் ஓவன் பெக்கை கடித்ததாக தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டு உள்ளார்.


இங்கிலாந்தில் பிரெஸ்டன்-பிளாக் பர்ன் அணிகள் இடையே நடந்த கால்பந்து போட்டியின் போது எதிர் அணி வீரரை கடித்ததற்காக கால் பந்து வீரர் மிலுடின் ஒஸ் மாஜிக்கு 8 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் அவருக்கு ரூ.16 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளதுடன்.

அவர் கடிக்கப்பட்டதாக நடுவர் மாட்டோனோ ஹூவிடம் பெக் கூறிய போதிலும், இந்தச் சம்பவத்திற்காக மிலுடின் ஒஸ்மாஜிக் ஆட்டத்தில் இருந்து வெளியேற்றப்படவில்லை.

போட்டியின் போது இடையே ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (6)

## கால்பந்து அரங்கில் மெஸ்சி '46' கோப்பை

### தரவரிசையில் முன்னிலை




ஆர்ஜென்டினாவின் மெஸ்சி, கால்பந்து அரங்கில் 46 கோப்பை வென்று சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவில், மேஜர் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் இன்டர் மியாமி, கொலம்பஸ் அணிகள் மோதின. இதில் இன்டர் மியாமி அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இன்டர் மியாமி சார்பில் மெஸ்சி 2 (45, 45+5 ஆவது நிமிடம்), லூயிஸ் சாரஸ் (48ஆவது) ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர்.

லீக் சுற்றில் விளையாடிய 32 போட்டியில், 20 வெற்றி, 8 "டிரா", 4 தோல்வி என 68 புள்ளிகளுடன் இன்டர் மியாமி அணி முதலிடத்தை கைப்பற்றியது.

இதன் மூலம் முதலிடத்துக்கான "சப்போர்டர்ஸ் ஷீல்டை" முதன் முறையாக கைப்பற்றியது இன்டர் மியாமி. இது, கால்பந்து அரங்கில் மெஸ்சி வென்ற 46 ஆவது கோப்பை ஆகும். இதில், ஒரு உலக கோப்பை (2022, ஆர் ஜென்டினா), இரண்டு "கோபா அமெரிக்கா" கோப்பை (2021, 2024, ஆர்ஜென்டினா), மூன்று "கிளப்" உலகக் கோப்பை (2009, 2011, 2015, பார்சிலோனா), நான்கு சம்பியன்ஸ் லீக் (2005-06, 2008-09, 2010-11, 2014-15, பார்சிலோனா) கோப்பை அடங்கும்.

இதன்மூலம் கால்பந்து அரங் கில் அதிக கோப்பை வென்ற வீரர்கள் வரிசையில் மெஸ்சி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். அடுத்த இடத்தில் பிரேசிலின் டேனியல் ஆல்வ்ஸ் (44 கோப்பை) உள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## விற்பனைக்கு


யாழ்.மானிப்பாய் வீதியில் 05 பரப்பு காணியும், யாழ்.திருநெல்வேலிச்சந்திக்கு அண்மையில் 1 ½ பரப்பில் அமைந்த காணியும் வீடும், யாழ்.நல்லூர்க் கோயிலுக்கு அண்மையில் 1 ½ பரப்புக் காணியும் வீடும், யாழ்.பிறவுண் வீதியில் 02 பரப்புக்காணியும், யாழ்.நல்லூர்க் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும், யாழ்.மின்சார நிலைய வீதியில் 1 பரப்பு 1 ½ பரப்பு காணியும், யாழ். சிவன் கோயிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 06 பரப்பு காணியும், யாழ்.சுதுமலை அம்மன் கோயிலுக்கு அண்மையில் 05 பரப்புக் காணியும், யாழ்.பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 05 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

(2225) தொடர்பு : 077 723 2535

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் யோகானந்தம்

பிறப்பு : 1949.11.16 இறப்பு : 2024.10.05



திக்கம் அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் யோகானந்தம் அவர்கள் நேற்று (05.10.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை மற்றும் பவளம், மகேஸ்வரி, சிவபாதசுந்தரம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகானந்தன் (இங்கிலாந்து), ரமேஸ் (இங்கிலாந்து), அரவிந்தன் (இங்கிலாந்து), சுரேஸ் (அமரர்), கார்த்திகா (இங்கிலாந்து), யசோதா, கேதீசன், பரந்தாமன் (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவிகா, சிவதர்சினி, மஸ்கலேகா, குருபரன், சதாகரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வலி.கிழக்கு, பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனும் மதுஷ்கா, சஞ்ஜெய், பிரணவன், அனுஷ்கா, கிருத்திக், அர்ஜுனா, மமதி, ஆதிரன், பிரணவி, கபிஷா, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2024) திங்கட்கிழமை திக்கத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 08.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"ஐதாலம்புலம்" திக்கம்,
அல்வாய் மேற்கு.

தகவல் : குடும்பத்தினர்
070 695 5536, 077 995 5536

(2222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. இது தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளதாவது, செப்ரெம்பர் மாதத்தில் மாத்திரம் 28,344 பேர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளனர். அதற்கிணங்க வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை 10 வீதம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு செம்ரெம்பர் மாதம் 25,716 பேர் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர். இதேவேளை 2024ஆம் ஆண்டின் கடந்த 9 மாதங்களில் 240, 000இற்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்களில் 99,939 பெண்களும் 142,170 ஆண்களும் உள்ளடங்குவர்.

அதன்படி 2024ஆம் ஆண்டில் இதுவரை முழுமையான திறமை கொண்டவர்கள் 70,396 பேரும், பகுதியளவில் திறமை கொண்டவர்கள் 3,704 பேரும் வேலை வாய்ப்புக்காக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளனர்.

இவர்களில் அதிகளவானோர் சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ளனர். இதேவேளை கடந்த 9 மாதங்களில் 6,391 பேர் இஸ்ரேலுக்கும், 6,295 பேர் ஜப்பானுக்கும், 5,870 பேர் தென்கொரியாவுக்கும் சென்றுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது. (நி)


UNIVERSITY COLLEGE OF JAFFNA

**UNIVERSITY COLLEGE OF JAFFNA**
**University of Vocational Technology**
**Ministry of Education**

Applications are open for the following Diploma / Higher National Diploma courses

1. Building Services Technology
2. Construction Technology
3. Cosmetology
4. Farm Machinery Technology
5. Food Technology
6. Hospitality Management
7. Information and Communication Technology
8. Mechatronics Technology
9. Production Technology

Closing Date 6th November 2024

*Entry Qualifications: GCE A/L Qualified or NVQ 4*

Accreditation QMS TVEC Approved Registration

Career Path: A/L or NVQ 4 → University College: NVQ 5 / Diploma → NVQ 6 / HND → NVQ 7 / Degree

For more details please visit:
* Website : www.ucj.ac.lk
* Telephone : 021-221-7791 or 021-221-7792
* Fill the google form and attach the required documents
* Please pay the Application fee Rs.1000 to the Account No. (Peoples Bank 162-100100045947) and upload the scanned copy of the bank receipt with the online application

(சி-1341)

Accepting online applications only



**Win Repair**

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம்.

தொடர்புகளுக்கு
076 834 6136
(2216)



**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

Western Union WU MoneyGram Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974



**மணமகள் தேவை**

1997, இந்து, ரோஹினி, **I.T Support,**
பூர்வீகம் - பூநகரி ,வதியுமிடம்- **Swiss**
மணமகன் பதிவு இல: 11003.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
10-10-2024 வரையான பதிவுகளுக்கு
20% விலைக்கழிவு
அழையுங்கள் 076 664 9401

**மணமகன் தேவை**

1996, இந்து, சதயம், **Software Engineer,**
பூர்வீகம் - காரைநகர் ,வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11061.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
10-10-2024 வரையான பதிவுகளுக்கு
20% விலைக்கழிவு
அழையுங்கள் 076 664 9401

**மணமகள் தேவை**

1996, இந்து, திருவாதிரை, **Software Engineer,**
பூர்வீகம் - மந்துவில் ,வதியுமிடம்- கொழும்பு
மணமகன் பதிவு இல: 11021.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
10-10-2024 வரையான பதிவுகளுக்கு
20% விலைக்கழிவு
அழையுங்கள் 076 664 9401

**மணமகன் தேவை**

1987, இந்து, விசாகம், **Development Officer,**
பூர்வீகம் - யாழ்ப்பாணம் ,வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11068.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
10-10-2024 வரையான பதிவுகளுக்கு
20% விலைக்கழிவு
அழையுங்கள் 076 664 9401


# இராசிபலன்

06.10.2024
புரட்டாதி 20, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி முழுவதும்.

விசாகம் முன்னிரவு 10.54 மணிவரை
சுபநேரம் -9.02-10.32 மணிவரை
இராகுகாலம் -4.32-6.02 மணிவரை
இலங்கை ஆசிரியர் தினம்

சந்திராஷ்டமம்.
உத்தரட்டாதி, ரேவதி
சதுர்த்தி விரதம்.

வள்ளுவன்

**மேஷம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**இடபம்** அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** இல்லத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் வலிய வந்து உதவுவார்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** தொலைபேசி வழித் தகவல் மனக் குழப்பத்தை அகற்றும், பொறுப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், புதிய திட்டங்கள் கைகூடும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**மிதுனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் கிடைக்கும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள் பிறர் உதவியுண்டு.

**கன்னி** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.

**தனுசு** தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், தேவையற்ற மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

அழகான உடலைத் தேடாதே அழகுள்ள மனதைத் தேடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கல்வி வலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நேற்று யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், இடம்பெற்றது.

யாழ். கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.யமுனா ராஜசீலன் தலைமையில், இடம்பெற்ற செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளர் க.ஜெ.பிறட்லி, சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ். கல்வி வலயத்தின் 34 பாடசாலைகளின் 84 அணிகளை கொண்ட 1008 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர் என்பதுடன், 100 ஆசிரியர்கள் நடுவர் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். (6)

## க.பொ.த சா/த பரீட்சை பெறுபேறுகள்-2023

### கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்

ஜெ.சமர்வாணன்-9ஏ, ம.தாருசா-9ஏ, அ.எழிலன்-8ஏ,பி, ஆ.ஆதித்யநிலா-8ஏ,பி, வி.கோபிகா-8ஏ,பி, ரா.கோமகள்-8ஏ,பி, ச.சாலினி-8ஏ,சி, பை.லிங்கேஸ்வரன்-8ஏ,எஸ், சி.அலைமகள்-8ஏ,எஸ்

### மு/கூழாமுறிப்பு அ.த.க பாடசாலை

சு.டினோசிகன்-8ஏ,சி

# காஸ் சிலிண்டர் சின்னத்தில் சுதந்திரக் கட்சி போட்டி?



(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணியாக காஸ் சிலிண்டர் சின்னத்தின் கீழ் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா அணி தீர்மானித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவும் அரசியல் உயர்பீடமும் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் கூடியது.

இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் போதும் ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கே நிமல் சிறிபால டி சில்வா அணி ஆதரவளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## யாழ்.பல்கலையில்

# 5ஆவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பொன்விழா நிகழ்வு வரிசையில் யாழ்.பல்கலைக்கழக சர்வதேச ஆய்வாளர்களின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தனது 5 ஆவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டை அதன் பொன்விழா ஆண்டில் 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்: இலக்கியத்தினூடான மானுட விடுதலை' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கவுள்ளது.

நாளை 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கிருஷ் பிள்ளை விசாக ரூபன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. 1ஆம் நாள் நிகழ்வில் ஆய்வுக் கட்டுரைகள், மூத்த படைப்பாளுமைக்கான கௌரவித்தல் நிகழ்வும் நாளை மறுதினம் 8 ஆம் திகதி 2 நாள் நிகழ்வுகளாக முப்பெரும் விழா மற்றும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையில் இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## யாழ்.மத்திய கல்லூரியின்

# பதில் அதிபரை நிரந்தரமாக்கக் கோரி மகஜர் கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் பதில் அதிபர் சி.இந்திரகுமாரினை நிரந்தரமாக நியமிக்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பெற்றோர்களால் கையொப்பமிடப்பட்ட மகஜரை ஜனாதிபதி அநுரவிடம் கையளிக்கக் கோரி நாளை திங்கட்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் கையளிக்கவுள்ளதாக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் இ.மங்களேஸ்வரன் அறிவித்துள்ளார். (6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் வடமாகாண கிளையில் கொடுப்பனவு கிடைக்கப்பெறாத ஒப்பந்தகாரர் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை நாவற்குழி திருவாசக அரண்மனை முன்பாக உள்ள சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (6)

# பசுமை அமைதி விருதுகள் விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

பசுமை அமைதி விருதுகளுக்கான சூழல் பொது அறிவுப் பரீட்சைக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுக் குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை இணைய வழியூடாக ஒக்டோபர்மாதம் 27 ஆம் திகதி இரவு 7 மணி தொடக்கம் 8.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரையிலும் இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் மட்டும் பங்குபற்ற முடியும்.

இலவசமாக இடம்பெறவுள்ள இப்பரீட் சையில் தோற்ற விரும்பும் மாணவர்கள் www.tamilnationalgreen.org எனும் இணைய முகவரியூடாக எதிர்வரும் 20.10.2024 இற்கு முன்பாக பதிவுகளை முன்னெடுக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# இணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் எம்முடன் பேசலாம்-தே.ம.ச

(கொழும்பு)


பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு எம்முடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தரப்புகள் எம்முடன் பேச்சு நடத்தலாம் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் ஆட்சியமைப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க முன்வந்தால் அது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாடு என்னவாக இருக்கும் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

எவர் வேண்டுமானாலும் எம்முடன் பேச்சு நடத்தலாம்.

ஆனால், அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் எவை, மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு அவை தடையாக உள்ளனவா, எமது கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றனவா என்பன உள்ளிட்ட விடயங்கள் ஆராய்ந்த பின்னரே அது தொடர்பில் முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (6)

# 122 சுயேட்சை குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன




(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத் தேர்தலுக்காக 122 சுயேட்சைக் குழுக்கள் இது வரை கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்றைய தினத்தில் மாத்திரம் 36 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலேயே அதிகளவான சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன.

குறித்த இரண்டு மாவட்டங்களிலும் 15 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (6)



யா/சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் சிறுவர் கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை முதல்வர் வீ.சுதாகரன் தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 462

Viber 076 636 3378



# தமிழினத்துக்கான தீர்வை இந்தியா விரும்புகிறது

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்று ஆட்சி அதிகாரங்களை தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து செயற்படத் தொடங்கி விட்டார்.

ஊழல் ஒழிப்பு என்பதை பிரதான நோக்காகக் கொண்ட அவரின் ஆட்சியை மக்கள் வரவேற்கின்றனர்.

அமைச்சுக்களின் பாவனையில் உள்ள அனைத்து அரச வாகனங்களும் உடன் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் அதிரடி உத்தரவினால் காலிமுகத்திடலில் வாகனங்கள் குவிந்தமை மக்களை விழிப்படையச் செய்துள்ளது.

> **இலங்கை பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு இந்தியா விரும்புகிறது. அந்தத் தீர்வு 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக அமுலாக்குவது என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது.**

மக்களின் வரிப்பணத்தில் இத்துணை சுகபோகங்களை அனுபவித்தவர்களால் நாடு அழிவுப் பாதையில் பயணிக்கத் தொடங்கியதையும் மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறான தலைவரைத்தான் இலங்கை தேடிக் கொண்டிருந்தது என்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் நடவடிக்கைகள் இருக்கின்றமையினை கண்ணூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் அநுரகுமார திஸாநாயக்கவின் உரையில் இந்தியா-சீனா போட்டிக்குள் இலங்கை சிக்கிக் கொள்ளாது.


நாம் அனைவரிடத்திலும் நட்புறவுடன் நடந்து கொள்வோம் என தனது நிலைப்பாட்டை தெளிவாக தெரிவித்திருந்தார்.

அநுர ஜனாதிபதியாகப் பதவியேற்றதுடன் இந்தியா முதலாவதாக அவருக்கு வாழ்த்து தெரிவித்தது, தங்களின் முதல் வெளிநாட்டுப் பயணம் இந்தியாவிற்கானதாக இருக்க வேண்டும் என இந்தியா விரும்புவதாக கோரிக்கை விடுத்திருந்தது. இதனூடாக ஜனாதிபதியின் முதல் வெளிநாட்டுப் பயணம் இந்தியா என்பது முடிவாகிவிட்டது.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

குறித்த விஜயம் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்ததாயினும் தேர்தல் நிறைவுற்று சில வாரங்களே கடந்த நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் பலராலும் உன்னிப்பாக கவனிக்கக் கூடிய விடயமாக மாறியிருந்தது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்த ஜெய்சங்கர் 13 ஆவது திருத்தச் சட்ட



மூலத்தை முழுமையாக அமுலாக்குமாறும் மாகாண சபைக்குரிய தேர்தலை விரைவாக நடத்துமாறும் வலியுறுத்தியிருந்தார்.

எல்லை தாண்டும் இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவே இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயம் என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்ததாயினும், 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு அவர் கூறியது மிக முக்கியம் வாய்ந்த ஒன்றாக மாறியிருக்கிறது.

அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 13 ஆவது திருத்த சட்ட மூலம் பற்றி எவ்வித கருத்தும் தெரிவிக்கப்படாத நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சரின் கோரிக்கை இலங்கை அரசிற்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியிருக்கும்.

13 ஆவது திருத்த சட்ட மூலம் என்பது தமிழ் மக்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக காணப்பட்ட போதிலும் தற்போதைய தமிழினத்தின் நிலை; பசிக்கு சோறு கேட்டவனுக்கு பாண் கொடுக்கப்பட, சரி அதையேனும் வாங்கி பசியாற்றிவிடுவோம் என்பது போலவே.

ஆதலால் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தையேனும் பெற்றுக் கொண்டு இழக்கப்பட்ட தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் முனைப்பில் தமிழினம் இருக்கின்றது.

இங்குதான் ஒரு விடயம் இலங்கை அரசிற்கு உறுத்தலாய் அமையப் போகிறது. 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை தமிழீழத்திற்கு ஒப்பானதாய் சிங்கள மக்களை நம்ப வைத்திருக்கிறார்கள் இனவாத அரசியல்வாதிகள்.

13 ஆவது திருத்த சட்ட மூலம் தமிழினத்திற்கு வழங்கப்படுமாக இருந்தால் அது சிங்கள மக்கள் மத்தியில் எவ்வாறான சிந்தனையை ஏற்படுத்தும் என்பதை நாம் இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

தவிர 13 ஆவது திருத்த சட்ட மூலம் இணைந்த வடக்கு கிழக்கை முன்னிலைப்படுத்தி நிற்கிறது.

அத்துடன் காணி, பொலிஸ் அதிகாரங்கள் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தின் முக்கிய கூறுகளாக உள்ளன.

இந்நிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக அமுலாக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் வலியுறுத்தியிருக்கிறார்.

நிலை இவ்வாறு இருக்கையில் தமிழ் தரப்புக்களின் நிலைப்பாடு எவ்வாறு அமையப் போகிறது என்பது கவனிக் கத்தக்க ஒன்றாகவுள்ளது.

தற்போதைய தமிழினத்தின் நிலை மாலுமியின்றிய படகைப் போன்றதே.

ஆம், தமிழ் தரப்புகள் கன்னை பிரிந்து, ஒருவருக்கொருவர் சேறு பூசும் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுகின்றனரே தவிர, தமிழினத்தின் பிரச்சினையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்று தீர்வு காணும் சிந்தனை அவர்களிடம் இல்லை என்பதே உண்மை.

ஏனெனில் இலங்கை வரலாற்றில் புதியவர் ஒருவர், புதிய சிந்தனைகளை விதைத்து ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றி, ஆட்சி நடத்தத் தொடங்கியிருக்கிறார்.

தமிழர் பிரச்சினைகளை அவர் எவ்வாறு கையாளப் போகிறார் என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அத்துடன் இந்தியா மற்றும் சர்வதேசத்துடன் இணைந்து எமது பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இலங்கை பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இந்தியா விரும்புகிறது. அந்தத் தீர்வு 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக அமுலாக்குவது என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது.

இவ்வாறான நிலையில் நாம் இந்தியாவையோ, சர்வதேசத்தையோ கண்டு கொள்ளாமல் எமக்குள், பாராளுமன்றப் பதவிக்காக அடித்துக்கொண்டால் அது ஒரு நாளும் விடிவைத் தராது.

தவிர தமிழ்த் தரப்புக்கள் ஒரு விடயத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, போலிகளையும் ஏமாற்றுக்காரரையும் தமிழினம் நன்கு அடையாளம் கண்டு கொண்டுள்ளது.

இதைப்புரிந்து கொள்ளாமல் மீண்டும் மீண்டும் தமிழினத்தை ஏமாற்ற நினைத்தால் ஏமாறப் போவது நீங்களாகத்தான் இருக்கும்.

இலங்கையில் புதிய ஆட்சி மலர்வு, இந்தியாவின் தமிழர் மீதான கரிசனை, சர்வதேசத்தை தமிழர் பிரச்சினை தொடர்பில் கவனம் கொள்ள வைத்தல் இவை அனைத்தும் ஒன்றிணையும் போது அது தமிழினத்துக்கு சரியான தீர்வை தரும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-** யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு நாளை 7 ஆம் திகதியும் நாளை மறுதினம் 8 ஆம் திகதியும் நடைபெற இருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கடந்த 50 ஆண்டுகால வரலாற்றில் தமிழ்த்துறையும் தமிழ்ப் பேராசிரியர்களும் ஆற்றிய பங்கும் பணியும் காத்திரமானவை.

யாழ்.பல்கலைக் கழகம் வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதலாவது தலைவராகப் பேராசிரியர் கைலாசபதியும் யாழ்.பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தராகப் பேராசிரியர் சு.வித்தியானந்தனும் இருந்தனர்.

இவர்கள் இருவரும் தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்கள். அதைவிட, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எண்டால் அது "தமிழ்" எண்ட நினைப்புத்தான் எங்கள் மனங்களில இருக்குது.

ஆகையால யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்ர 50 ஆவது ஆண்டு நிறைவில் நடைபெறுகின்ற அனைத்துலக தமிழ் மாநாட்டில அதிகளவான தமிழ் ஆர்வலர்களும் பிரமுகர்களும் கலந்து கொள்ள வேணும்.

உண்மையில சர்வதேச மாநாடு என்றால் அதில பன்னாட்டு அறிஞர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவதும் அதனைப் பல்கலைக் கழக சமூகமும் ஏனையவர்களும் அறிந்து கொள்வதும் கட்டாயமானது.

சுருங்கச் சொன்னால் பல்கலைக்கழகங்களில நடைபெறுகின்ற சர்வதேச மாநாடு என்றால், அது ஒரு பெரும் கும்பாபிஷேகத்திற்கு ஒப்பானது.

எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில நடைபெறுகின்ற சர்வதேச மாநாடுகள் படிக்கட்டு அபிஷேகம் போல நடப்பது தான் கவலைக்குரியது.

தவிர, குறித்த மாநாடுகளில பங்கு பற்றுநர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதும் வேதனைக்குரியது.

எனவே நடைபெறப் போகின்ற அனைத்துலக தமிழ் மாநாட்டில பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கு பற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன் உயர்தரத்தில் மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகக் கற்று தமிழை சிறப்புத் துறையாகத் தெரிவு செய்து அதில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் நாம் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு பண்டிதர் நீண்ட உரை ஆற்றினார்.

**வாத்தியார்:-** பண்டிதர் ஐயா சொன்னது அவ்வளவும் நூறு வீதம் உண்மை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில தமிழ்த்துறை விழுமாக இருந்தால், அது எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர வீழ்ச்சியாக இருக்கும்.

இப்ப எல்லாம் பட்டப் படிப்பில தமிழை ஒரு பாடமாக அல்லது தமிழை சிறப்பாகக் கற்பதற்கு மாணவர்கள் முன்வருவதில்லை.

உலகம் முழுவதிலும் மொழி சார் கல்வியில பட்டப்படிப்பை மேற்கொள்வதில மாணவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

ஆனால் எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில தமிழ் மொழியைக் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவது வேதனைக்குரியது.

அந்தக் குறையை சர்வதேச தமிழ் மாநாடுகளை நடத்துவதன் மூலம் செம்மையாக்கி, தமிழைக் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் கூறியதும் ஆலடி நிசப்தமாகியது.



# சின்னா பின்னப்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள்

நிசப்தத்தைக் குலைக்க, விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, இஸ்ரேலின்ர அராஜகத்திற்கு முடிவு கிடைக்குமோ.

**சாத்திரியார்:-** இந்த உலகத்தில எதுக்கும் ஒரு முடிவு இருக்குது.

இஸ்ரேல் நடத்தின கொடூரத் தாக்குதலில காஸாவில எத்தனையோ பிஞ்சுகள் உயிரிழந்தும் அங்கவீனமாகியும் போயின.

உலக வல்லாதிக்க நாடுகள் இஸ்ரேலுக்குப் பக்க துணையாக இருக்கினம்.

**வாத்தியார்:-** சாத்திரியார், சுன்னாகத்தில ஓய்வு பெற்ற தபாலதிபர் திருநாவுக்கரசு ஐயா இருக்கிறார்.

மனிதநேயம் மிக்க சிந்தனையாளர்.

தன்ர அரச பணியை மிகச் சிறப்பாக ஆற்றி இனம், மதம் கடந்து மக்களின் மதிப்பைப் பெற்ற ஒருவர்.

அவர் அண்மையில கதைக்கும் போது, இறைவன்ர ஆட்சியில எதற்கும் ஒரு எல்லையும் நியமமும் உண்டு.

விண்வெளிக்குச் சென்ற சுனித்தா வில்லியம் இன்னும் பூமிக்கு வந்து சேர முடியல்ல.

பூமியில இருந்து அவரை விண்வெளிக்கு அனுப்பி வைத்தவர்கள் அவரைக் கீழ இறக்கிப் பூமிக்குக் கொண்டு வாறதில கடும் சிரமப்படுகினம்.

இது தான் கடவுள் கொடுத்த தவணை எண்டு போஸ் மாஸ்ரர் திருநாவுக்கரசு ஐயா சொன்னவர்.

அவர் சொன்ன அந்த உதாரணத்தைத் தான் நானும் நினைத்துப் பார்க்கிறன்.

இஸ்ரேலுக்கும் ஒரு தவணை இருக்குது. அந்தத் தவணை வரும் போது அந்த நாடு விரைவில் உரிய பரிசைப் பெற்றுக் கொள்ளும்.

**மூப்பர்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். அப்ப எங்கட தமிழ் அரசியல் என்ன மாதிரி...

**வாத்தியார்:-** மூப்பர் அது தானே நடந்து கொண்டிருக்குது.

ஒரு காலத்தில எப்படி இருந்த எங்கட அரசியல் கட்டமைப்பு, இப்ப எப்படி சின்னாபின்னமாகிப் போயிற்றுது பார்த்தியளே.

இது தான் அந்தக் காலத்தில இருந்து, ஏழைகளையும் அப்பாவி இளைஞர்களையும் உசுப்பேத்தி உசுப்பேத்தி தங்கட அரசியல் பிழைப்பை நடத்திய தமிழ்க் கட்சிகள் இன்றைக்கு சுக்குநூறாக உடைஞ்சு கந்தறுந்து காவடி எடுக்குது.

**மூப்பர்:-** அதெண்டால் உண்மை தான். ஒருக்காலும் மற்றவர்களை ஏமாற்றி நாங்கள் வாழ நினைத்தால், அதற்கு ஆண்டவன் ஒரு போதும் அனுமதிக்கமாட்டான்.

**கங்காணி:-** அநுர குமார திஸாநாயக்கா ஜனாதிபதியாக வருவார் எண்டு ஆரும் நினைச்சவியளோ.

அதிலும் இலங்கை வரலாற்றில யார் ஜனாதிபதியாக வெற்றி பெற்றாலும் அதில மனத் திருப்தியடையாத தமிழ் மக்கள், அநுர தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகிய போது, தங்களை அறியாமலே மன ஆறுதல் அடையினம் எண்டால், அதற்கு என்ன காரணம்.

இனப் பிரச்சினைக்கு என்ன தீர்வு எண்டு கூட அநுர இன்னமும் கூறவில்லை. அல்லது கடந்த காலங்களில நடந்த போரில தமிழ் மக்கள் அவலப்பட்ட போது, அது தொடர்பிலும் மக்கள் விடுதலை முன்னணி வாய் திறக்கல்ல.

அப்படியிருந்தும் ஜனாதிபதி அநுர எண்டதும் தமிழ் மக்கள் மனத்திருப்தியடையினம் எண்டால், அதற்கு மூல காரணம் ஒரு நேர்மையான- ஊழல் இல்லாத ஒருவர் இந்த நாட்டை ஆளவேணும் என்பது தான்.

இந்த உண்மையை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கட்டாயம் தெரிந்து கொள்ள வேணும்.

அதோட எங்கட தமிழ் அரசியல் தரப்புகளும் இதைப்புரிந்து கொள்ள வேணும்.

இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஜினமோல்ட்டினால் உடலுக்கு ஏற்படும் பிரச்சினையான பற்றிக் கூற முடியுமா வியாசரே?

**சிவஞானம் — யாழ்ப்பாணம்**

**ஏமாறுபவன் இருக்கும் வரை ஏமாற்று பவனும் இருப்பான். இதுபற்றி?**

எம் முன்னோர்கள் அடுப்புக் கரியினால் பல் துலக்கினர். அவர்களின் பற்கள் ஆரோக்கிய மாகவே இருந்தது.
பற்பசைக் கம்பனிகள் அடுப்புக் கரியினால் பல் துலக்கினால் பற்கள் பழுதடையும் என்று விளம் பரம் செய்தனர்.
எம்மவர்களும் அடுப்புக் கரியினைக் கைவிட்டு அமிலம் நிறைந்த பற்பசைக்கு மாறினர்.
அதே கம்பனிகள் இப்போது அடுப்புக் கரி சேர்க் கப்பட்ட பற்பசைகள் பற்களை உறுதியாக்கும் என்று விளம்பரம் செய்கின்றனர்.
இது தான் ஏமாற்றுக்களிலேயே மிக மோசமான ஏமாற்று. இதைப் புரிவதற்குள்ளே எமக்கு வாயில் இருக்கும் பற்கள் முப்பத்தி இரண்டும் விழுந்து விடுகின்றன.

**குரு — யாழ்ப்பாணம்**

**திரைப்படங்களில் போதைவஸ்துக் காட்சிகளை தடை செய்வதற்கு அர சாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறதா? இது தேவையான ஒன்றா?**

அப்படிப் பார்த்தால் இப்போது வெளியாகும் எந்தத் திரைப்படத்தையும் திரையிட முடியாது.
அந்தளவிற்கு இப்போது வெளியாகும் திரைப் படங்களில் போதைவஸ்து தொடங்கி கொலை, கொள்ளைக்குற்றங்கள் நிறைந்ததாகவே வெளி யாகின்றன.
இதில் வேதனை என்னவென்றால் போதை வஸ் துப் பாவனை, கொலை, கொள்ளை அடிதடி அரா ஜகம் என்பவற்றைச் செய்வது குறித்த திரைப் படத்தின் கதாநாயகன் என்பதுதான்.
இவ்வாறு நிலை இருந்தால் இதைப் பார்த்து ரசிக்கும் இளம் தலைமுறை போதை, கொலை, கொள்ளை அடி த்டி என்பன தவறான ஒன் றல்ல எனும் சிந்தனைக்கே வருவார்கள். வந்து விட்டார் கள். அதன் விளைவையே இப்போது அனுபவிக் கிறோம்.

**பிரியன் — கிளிநொச்சி**

**அஜினமோல்ட்டினால் உடலுக்கு ஏற்படும் பிரச்சினை பற்றிக் கூற முடியுமா வியாசரே?**

உப்புச் சுவையைக் கொண்ட அஜினமோல்ட் சீனர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் சுவை யூட்டியாகும்.இது சோடியம் மற்றும் குளுட்டமிக் அமிலத்தில் இருந்து தயாரிக்கப்படுகின்றது.
அஜினமோல்ட்டை அதிகளவில் பயன்படுத்து வதனால் நரம்பு மண்டலங்கள் செயலிழக்கும் அபாயமுண்டு. உடலில் வியர்வைப் பிரச்சினை ஏற்படுத்தும்,இது உடல் சோர்வைத் தர வல்லது.
இதிலுள்ள சோடியம் மூட்டுத் தசைவலியை ஏற்படுத்து கின்றது.குடலில் செரிமானப் பிரச்சி னையை ஏற்படுத்திக் குடல் உபாதைக்கு வழி சமைக்கிறது.
அத்துடன் இரத்த அழுத்தம் தலைவலி, சுவாசப் பிரச்சினை, நித்திரையின்மை போன்றன ஏற்ப டுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.
புற்றுநோய்க்குரிய செல்களை அதிகம் சுரக்க அஜினமோல்ட் உறுதுணை புரிவதாகவும் ஆய் வுகள் கூறுகின்றன.
எமது பண்பாடு கலாசார உணவு முறைகளில் உடலுக்கு தீங்கின்றிய எத்தனையோ உணவுச் சுவையூட்டிகள் உள்ளன. அவற்றைப் பயன் படு த்தி ஆரோக்கியமாக வாழ்வதே சிறந்தது.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**நிருப் — மானிப்பாய்**

**இடியப்பச்சிக்கைப் போன்றதே எம் சமூகப் பிரச்சினைகளும்.இது தீர்க்கப்படுமா வியாசரே?**

இடியப்பத்தைப் பிழியும் போது அதைச் சுற்றி, சுற்றி பிழிவதனாலே அதன் சிக்கல், சிக்கலாகவே இருக்கிறது. அதே இடியப்பத்தை சுற்றாமல் நேராகப் பிளிந்தால் அது சிக்கலுக்குரியதல்ல.
எந்த விடயத்தையும் கையாளுவது நம்மைப் பொறுத்ததே. கையாளும் எம்மிடம் சிக்கலைத்தீர்க்கும் நம்பிக்கை இருந்தால் மாத்திரமே முன்னேற முடியும்.
இல்லையேல் இடியப்பத்தைப் பிழிந்து சிக்கலாக்குவ தாய் எமது வாழ்வையும் சிக்கலாக்கிவிடும்.
சிக்கல்கள் சரி செய்யப்பட வேண்டியவை. அவை சரி செய்ய முடியாத சிக்கலாக ஒரு நாளும் இருக்க முடியாது என்பதை மனதில் கொண்டால் எல்லாம் சரியாகும்.

**மதுவன் — மீசாலை**

**அரசியல் கைதிகளை விடுவித்தே தீருவேன் என்கிறாரே அமைச்சர் விஜித ஹேரத் ?**

ஆட்சியாளர்களிடம் அவ்வாறு ஒரு சிந்தனை வருவதே பெரிய விடயம். அநுரகுமாரதிஸாநாயக்க ஆட்சிக்கு வரும் முன் கொடுத்த வாக்குறுதிகளில் இதுவும் ஒன்று. அதை அவர் செம்மையாகச் செய்வார் என்பது மக்களின் நம்பிக்கை.
தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்துவாராயின் நிச்சயம் அவர் தமிழ் மக்களின் மனங்களில் நீங்கா இடம் பிடிப்பார்.
அந்த இடம் ஒரு நாளும் அழிந்திடா இடமாக இருக்கும். பயங்கரவாதச் சட்டம் நீக்குதல் அரசியல் கைதிகள் விடுதலை என்பவற்றில் அநுர அக்கறை காட்ட வேண்டும்.
இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.



திரைப்படங்களில் போதை வஸ்துக் காட்சி களை தடை செய்வதற்கு அரசாங்கத்திற்கு அதி காரம் இருக்கிறதா? இது தேவையான ஒன்றா?

**தனுசன் — ஆனைக்கோட்டை**

**அடுத்த ஐந்து ஆண்டுகளில் இலங்கை சிங்கப்பூராக மாறுமா வியாசரே?**

சிங்கபூராக மாற்றம் பெறுவதற்குமுன்னர் மனிதர் வாழக்கூடிய நாடாக மாற வேண்டும்.
இதுவே இப்போதைய தேவை. ஒரு அமைச்சர் தனக்கு, நண்பர்களுக்கு, மாமன்,மச்சான் மாருக்கு என்று தனக்குத் தேவையானவர்க ளுக்கெல்லாம் அரசு செலவில் வாகனம் கொடுத்தால்...
சமூகத்தை கெட்டுக் குட்டிச் சுவராக்கும் மதுபான சாலைகளுக்கு அனுமதி பெற்றுக் கொடுத் தால்... நாடு எக்கேடு கெட்டுப் போனால் நமக் கென்ன நாம் நினைத்த போக்கில் வெளி நாட்டு க்கு சுற்றுலா அடித்தால் ....
பாராளுமன்றம் சென்றது முதல்கொண்டு அங்கு இருப்பதற்கு,நடப்பதற்கு,உறங்கு வதற்கு, உண்பதற்கு இப்படிப் பல வழிகளில் அரச பணத்தை வீணடித்தால்...
எப்படி எமது நாடு முன்னேறும்? நாட்டில் ஒரு புதிய மாற்றத்தை மேற்கொள்ளும் நோக்குடன் அநுர வந்திருக்கிறார்.
பொறுத்திருந்து பார்ப்போம். இலங்கை சிங்கப்பூர் ஆகுமா? சீர்கெட்டுப் போகுமா? என்பதை.

**இளங்கோ — மானிப்பாய்**

**உயிருடன் இருக்கும் ஒருவர் எழுதியதை அவரின் அனுமதி இன்றி மற்றொருவர் மாற்றுவது தர்மமாகுமா?**

மரணப் படுக்கையில் இருக்கும் தனது தந்தையின் கைநாட்டை சொத்துப் பத்திரத்தில் பதித்த மகன்
1 இன் பின் எண்ணுக்கணக்கின்றி பூச்சியங்க ளைப் போடுகின்றான்.
வீட்டின் கூரையில் இருந்த பல்லி ஒன்றின் எச்சம் சொத்துப் பத்திரத்தில் இருக்கும் 1 இல் வீழ்கிறது.
அதைத் தனது கையினால் துடைக்கிறான். அந்த ஒன்று அழிந்து போகிறது. தந்தை இறந்துபோகிறார்.
இப்போது அவன் கையில் இருக்கும் சொத்துப் பத்திரம் பூச்சியங்கள் நிறைந்த மதிப்பிழந்த பத்திரம் மாத்திரமே.
அதற்கு மதிப்பேதும் இல்லை என்பது தெரிந்து அழத் தொடங்குகிறான் அவன்.
அடுத்தவர் அனுமதியின்றிப் பெறப்படும் எது வும் செயலிழந்து போகும். இதுவே உண்மை.

**மதுமிது — சாவகச்சேரி**

**அரசியல் தளத்தில் சிலரின் பெயர்கள் பலமாக அடிபடுகின்றனவே?**

என்ன செய்வது மக்கள் பிரச்சினையைத் தீர்க்கின்றேன் என்று பக்கம் பக்கமாக வசனம் பேசிக் கொண்டு வந்தவர்கள் எம்மவர்க ளுக்கே துரோகம் இழைக்கின்றார்கள் என் றால் மனம் சுக்குநூறாக உடைந்து விடுகின்றது. வன்னிப் பெரும் நிலப்பரப்பில் கொத்துக் கொத் தாய் கொன்றொழிக்கப்பட்ட இனத்தின் இரத் தத்தை உறிஞ்சும் அட்டைகளாய் எம்மவர்கள் இருக்கின்றார்கள் எனும் போது; அடடா இவர் களையா நாம் வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பினோம் என வெட்கித் தலைகுனிகிறது தமிழினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எல்லோரும் நம் வாழ்வில் ஒருமுறையாவது தோல்வியைச் சந்தித்து இருப்போம். ஒரு சிலர் அவர்களின் தோல்வியைக்கடந்து வர முயற்சி செய்கிறார்கள். இன்னும் ஒரு சிலர் முதல் தோல்வியிலேயே துவண்டு விடுகிறார்கள்.

சரி எப்படிதான் இந்த தோல்வியை நாம் சமாளிப்பது காண்போம் வாருங்கள்.

**1. தோல்வியை பற்றிய உங்கள் பார்வையை மாற்றுங்கள்**

தோல்வியை வளர்ச்சியின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளுங்கள். தோல்வி என்பது வெற்றிக்கான முதல் படி என்று பலர் கூற நீங்கள் கேட்டிருக்கலாம். ஒவ்வொரு பின்னடைவும் புதிதாக ஒன்றை உங்களுக்கு கற்றுக் கொடுக்கிறது. அதை ஒரு வாய்ப்பாக பாருங்கள். ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

**2. என்ன தவறு நடந்தது என்பதை கண்டறியுங்கள்**

நீங்கள் ஏன் தோல்வி அடைந்தீர்கள், என்ன தவறு செய்தீர்கள் என்பதை பற்றி சிந்தியுங்கள். நீங்கள் உங்களை சரியாக தயார் செய்து கொள்ளவில்லையா? உங்கள் திறன்கள் போதவில்லையா? அல்லது வேறேனும் வெளிப்புற காரணங்களா?

சில நேரங்களில் எந்த காரணங்களால் நாம் தோல்வி அடைந்தோம் என்பதை நம்மால் கண்டறிய இயலாது. அந்த நேரங்களில் உங்கள் முயற்சிகளை கண்காணிப்பவர்களிடம் நீங்கள் கருத்துக்களை கேட்கலாம். அது உங்கள் வழிகாட்டிகளாக இருக்கலாம், உங்கள் நண்பர்களாக இருக்கலாம், உங்கள் சக ஊழியர்களாக கூட இருக்கலாம்.

தோல்விக்கான காரணத்தை நிச்சயம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்தத் தவறை மீண்டும் நாம் செய்யாமல் இருப்போம்.

**3. தீர்வுகளில் கவனம் செலுத்துங்கள்**

இப்போது நீங்கள் ஏன் தோல்வி அடைந்தீர்கள் என்பதை நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். "அட இதனால்தான் தோற்றுவிட்டோமா என்று நினைத்து வருத்தத்தில் மூழ்கி விடாமல், இந்தத் தவறை எவ்வாறு திருத்திக் கொள்ளலாம், அடுத்த முறை நம் அணுகுமுறையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றி சிந்தியுங்கள்.

உங்கள் தோல்விகளில் இருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள் என்பதை குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். இந்த பாடங்கள் உங்கள் எதிர் கால முயற்சிக்கு உதவும்.

**4. முன்னேற்றத்தை கொண்டாடுங்கள்**

தோல்வியை எண்ணி வருந்துவதற்கு பதிலாக நீங்கள் கடந்து வந்த பாதையையும் உங்கள் முன்னேற்றத்தையும் நினைத்து பெருமைப் படுங்கள். இது ஒரு நேர்மையான கண்ணோட்டத்தை உங்களுக்கு கொடுக்கும். உங்கள் நேர்மறை சிந்தனை நீங்கள் சவால்களை சந்திப்பதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

**5. செயலில் இறங்குங்கள்**

உங்கள் தவறிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டீர்கள் என்பதை நீங்கள் உறுதி செய்த பிறகு உங்கள் அடுத்த இலக்கை நோக்கி செயற்படத் தொடங்குங்கள். நீங்கள் கற்றுக்கொண்டதை அடுத்த வாய்ப்புகளில் பயன்படுத்துங்கள்.


உங்களால் மாற்ற முடியாத வெளிப்புறக் காரணங்களை விட்டுவிட்டு, உங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அம்சங்களில் கவனம் செலுத்துங்கள்.

பல வெற்றியாளர்கள் வெற்றி பெறுவதற்கு முன்பு பல தோல்விகளைச் சந்தித்துள்ளனர் என்பதை மறந்து விடாதீர்கள். விடாமுயற்சி முக்கியமானது என்பதை அறிந்து தொடர்ந்து செல்லுங்கள்.

# தோல்வியையும் கொண்டாடுங்கள்



# புத்தர் விளக்கிய கதை



உறங்குவதில்கூட ஞானிகளுக்கும் சாதாரண மனிதருக்கும் வித்தியாசம் இருக்கிறது. இப்படிச் சொன்னால் சிலர் சீறியெழக்கூடும். ஒருக்களிச்சுப் படுத்திருப்பார்கள், மல்லாக்காகப் படுத்திருப்பார்கள். இல்லை என்றால் குப்புறப் படுத்திருப்பார்கள். தூங்குறதில் என்ன வித்தியாசம் இருக்கப்போகுது. இதற்கு பகவான் புத்தரின் வாழ்க்கைச் சம்பவம் விளக்கம் தருகிறது.

ஆனந்தன், புத்தரின் பிரதான சீடர்களில் ஒருவர். 40 ஆண்டு காலம் அவரின் சீடராக இருந்து உபதேசம் பெற்றவர். பகலெல்லாம் அவருடனேயே இருப்பார். அவரின் அருளுரைகளைக் கேட்பார். இரவில் புத்தபிரான் உறங்கும்போதும் கூடவே இருந்து சிறிது நேரம் அவரைக் கவனித்தபடி இருப்பார். ஆனந்தன் அதிகாலைப்பொழுது ஒன்றில் புத்தரிடம் இப்படிச் சொன்னார்.

"பகவானே... சிறு சந்தேகம்..."

"கேள் ஆனந்தா..."

"இது முட்டாள்தனம்தான். இப்படியொரு கேள்வியைத் தங்களிடம் கேட்கக் கூடாதுதான். ஆனாலும் என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை. நீங்கள் உறங்கும்போது, மணிக் கணக்கில் உங்களை நான் கவனித்திருக்கிறேன். நடு இரவில் திடீரென விழித்தெழுந்து உங்களைப் பார்த்திருக்கிறேன். காலையில் நீங்கள் விழித்து எழுவதற்கு முன்புகூட உங்களைக் கவனித்திருக்கிறேன்.

தூங்கும்போது எந்த நிலையில் நீங்கள் படுத்திருக்கிறீர்களோ, அதே நிலையில்தான் காலையில் விழித்தெழுகிறீர்கள். இடையில் ஓர் அசைவும் இல்லை. புரண்டு படுப்பதுகூட இல்லை. முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை. அன்றலர்ந்த மலர்போல் துளி வாட்டமும் இல்லாமலிருக்கிறது முகம். இது எப்படித் தங்களுக்குச் சாத்தியமாகிறது?"

"இதில் ரகசியம் ஒன்றும் இல்லை. நீ விழிப்படைந்து விட்டாயா... பிறகு அங்கே உடலுக்கு வேலை இல்லை. உடல்தான் உறங்கச் செல்கிறது. விழிப்படைந்த மனதுக்கு இரவோ, பகலோ எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை. உள்ளுக்குள் ஒரு ஜோதி விழிப்பு நிலையில் எரிந்துகொண்டேயிருக்கும்.

களைப்படைவதால்தான் உடல் உறக்கத்துக்குச் செல்கிறது. நான் உறங்கினாலும் என் மனம் விழித்திருக்கும். அதனால்தான் என் உடல் அசைவதில்லை. என் முகத்துக்கும் உடலுக்கும் சோர்வு ஏற்படுவதில்லை.'

வெகு எளிதாக புத்தர் விளக்கி விட்டார். யோசித்துப் பார்த்தால் ஒன்று புலப்படும். தன்னிலை மறந்த நிலையில் மேற்கொள்ளும் இறை வழிபாடும் ஆழ்ந்த தியானமும் உறக்கத்தில்கூட நம் மனதை விழிப்பு நிலையில் வைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: கர்ணன்
பாடியவர்: சுசீலா
பாடல் வரிகள்: கண்ணதாசன்
இசை: வி.ஆர்



கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே
கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே

கால்கள் இங்கே மேனியும் இங்கே
கால்கள் இங்கே மேனியும் இங்கே
காவலின்றி வந்தன இங்கே
ஆ ஆ ஆ ஆ ஆ...

கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே

மணி கொண்ட கரமொன்று அனல் கொண்டு வெடிக்கும்
அனல் கொண்டு வெடிக்கும்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ...

மணி கொண்ட கரமொன்று அனல் கொண்டு வெடிக்கும்
அனல் கொண்டு வெடிக்கும்
மலர் போன்ற இதழின்று பனி கண்டு துடிக்கும்
மலர் போன்ற இதழின்று பனி கண்டு துடிக்கும்
துணை கொள்ள அவனின்றி தனியாக நடிக்கும்
துயிலாத பெண்மைக்கு ஏனிந்த மயக்கம்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ...

கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே

இனமென்ன குலமென்ன குணமென்ன அறியேன்
குணமென்ன அறியேன்
இனமென்ன குலமென்ன குணமென்ன அறியேன்
குணமென்ன அறியேன்
ஈடொன்றும் கேளாமல் எனையங்கு கொடுத்தேன்
துடி கொண்ட மதயானை உயிர் கொண்டு நடந்தான்
குறை கொண்ட உடலோடு நானிங்கு மெலிந்தேன்
ஆ ஆ ஆ ஆ...

கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே
கண்கள் எங்கே

# ஆயுதமாக மிரட்டும் ட்ரோன்கள் அழிவியலாக மாறும் அறிவியல்

**"ட்ரோன் தாக்குதல்களுக்கு முன்புவரை 'நம் நாட்டில் போர் நடக்கிறதா?' என்ற அளவிற்கு ரஷ்ய மக்களை, அவர்களது அரசாங்கம் பாதுகாத்தது. இப்போதோ நிலைமையை மாற்றி அவர்களுக்கு உயிர் அச்சத்தைத் தந்துள்ளது."**

போருக்கான இலக்கணங்களையும் வரைமுறைகளையும் மாற்றிஎழுதிக் கொண்டிருக்கின்றன ட்ரோன்கள். ரஷ்யா- உக்ரைன் போரில் ட்ரோன்களின் விஸ்வரூபம் ஆபத்தான ஒரு ட்ரெண்டின் ஆரம்பாகியுள்ளது.

1000 ஆவது நாளை நெருங்கிக் கொண்டிருக்கிறது உக்கிரமான ரஷ்ய - உக்ரைன் போர்க்களம். மடிந்து வீழ்ந்த உயிர்களாலும் நொடிந்து போயுள்ள பொருளாதாரத்தாலும் இரு நாடுகளையும் ஓர் அங்குலம்கூடப் பின்வாங்க வைக்க முடியவில்லை. முன்னேற்றமும் பின்னடைவும் கயிறு இழுக்கும் போட்டியாக இருபுறமும் மாறி மாறிப் போய் வருகின்றன.

ஏறக்குறைய 15 கோடி மக்கள்தொகை கொண்ட ரஷ்யாவை அதில் வெறும் ஐந்தில் ஒரு பங்கு மக்கள்தொகையை மட்டுமே கொண்ட உக்ரைன் போரில் சமாளிப்பது மட்டுமன்றி சரிநிகராக சண்டையும் செய்கிறது. பல நாடுகளின் ஆதரவு தந்த துணிவும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. என்றாலும், போர்த்தந்திரங்களையும் உக்திகளையும் அவர்கள் தங்களது தொழில்நுட்பத்தால் மேம்படுத்தி இருப்பதுதான் முக்கிய காரணம். குறிப்பாக, ட்ரோனை பிரதான ஆயுதமாக்கி உக்ரைன் வியூகங்களை வகுத்து ரஷ்யாவைத் திணறடித்துவருகிறது. இந்த விடயத்தில் யானையின் காதுகளில் நுழைந்த எறும்பின் நிலைதான் ரஷ்யாவுக்கு.

### நவீனப் போர் வீரன்...

ட்ரோன் தற்சமயம் போர்க்களத்தின் நவீனவகை ஆபத்தான ஆயுதம். பறக்கும் சிசிடிவி கமராவாகவும், விசுவாசமுள்ள ஒற்றனாகவும் மாறி எதிரியின் எல்லைக்குள் நுழைந்து தகவல் சேகரிப்பது முதல் அவர்களைத் தாக்குவது வரை ஒரு போர் வீரனாகவே செயலாற்றுகின்றன ட்ரோன்கள்.



உக்ரைன் கடந்த செப்ரெம்பர் 10 அன்று தனது 144 ட்ரோன்களைக் கொண்டு வான் மார்க்கமாக மொஸ்கோவைத்தாக்கியது.

செப்ரெம்பர் 18 அன்று டிவீர் நகரம் உள்ளிட்ட பல ரஷ்ய நகரங்களை 50இற்கும் அதிகமான உக்ரைன் ட்ரோன்கள் வேட்டையாடின. கடந்த இரண்டரை ஆண்டுகளில் பலமுறை இந்த ட்ரோன் தாக்குதல் நடந்தேறியுள்ளது. பொதுமக்களை மட்டுமல்ல இது இராணுவ வீரர்களையும் அச்சுறுத்தியுள்ளது. தாக்க வரும் ட்ரோன்களின் கண்கள் பதிவுசெய்த ரஷ்யப் படையினரின் மிரட்சி நிரம்பிய முகங்கள் இடம்பெற்ற வீடியோக்கள் வைரலாகின.

### ட்ரோன் உருவாக்கம்!

ஏறக்குறைய 10,000 ட்ரோன்களை ஒவ்வொரு மாதமும் போரில் உக்ரைன் இழக்கிறது எனச் சொல்லப்படுகிறது. இழப்பதே இவ்வளவு எனில் பயன்படுத்தப்படுவது எவ்வளவு எனப் பார்த்துக் கொள்ளுங்கள். இவ்வளவு ட்ரோன்களை எப்படி உக்ரைனால் உற்பத்தி செய்ய முடிகிறது? மிகக் குறைந்த விலையிலான ட்ரோன்களை உக்ரைன் உற்பத்தி செய்வதுதான் எண்ணிக்கையை அதிகரிக்க முடிந்ததற்கான சூட்சுமம்.

தகவல் சேகரிக்க மட்டும் அனுப்பப்படுவதல்ல ட்ரோன்கள். ரஷ்யாவின் இராணுவத் தளபாடங்களை அழிப்பதோடு ஏவுகணைகளை முற்றிலுமாக செயலிழக்கவும் வைக்குமளவு இவை உக்ரைனுக்குக் கைகொடுக்கின்றன.

உண்மையில் டிரோன் தாக்குதல்களுக்கு முன்புவரை, 'நம் நாட்டில் போர் நடக்கிறதா?' என்ற அளவிற்கு ரஷ்ய மக்களை அவர்களது அரசாங்கம் பாதுகாத்தது. இப்போதோ, நிலைமையை மாற்றி அவர்களுக்கு அச்சத்தைத் தந்துள்ளது ட்ரோன்.

### யார் கட்டுப்படுத்துவது..?


இரண்டாவது உலகப் போரில் ஹிரோஷிமா நாகசாகி அணுகுண்டுக்கு இரையானபோது எப்படியொரு பயம் மக்களைச் சூழ்ந்ததோ சாதாரண சத்தம் கூட அவர்களை 'குண்டு' என நினைத்துப் பதறும் அளவுக்கு உளவியல் ரீதியாக அச்சுறுத்தியதோ, அதேபோன்ற நிலைதான் இப்போது இரு நாடுகளின் குடிமக்களுக்கும்.

குறிப்பாக ரஷ்யர்கள் எப்போது போர் முடியும் எனக் காத்திருக்கிறார்கள். அப்பாவி பொதுமக்களின் மீது இப்படிப்பட்ட பொருட்களைக் கொண்டு தாக்குதல் நடத்துவது ஐ.நாவின் சட்டங்களுக்கு எதிரானதுதான். இருப்பினும் இன்னமும் மிகப்பெரியதொரு எச்சரிக்கையை அது விடுவிக்கவில்லை இது முறைப்படுத்தப்படவேண்டும். ட்ரோன்கள் மூலமாக போரின் மற்ற கருது கோள்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் ஆனால் மக்களைச் சூறையாடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானில் விரிகிறது

வெயில் நிறைந்து கிடைக்கும்
ஞாயிறு மதியங்கள்
கொஞ்சம் சோம்பலாகத்தான் கழிகின்றன..
மரங்களில் நிழல்களுக்கு அப்பால்
பொழுதுகள் வெற்றுத்தாள் போல்
எந்த வார்த்தைகளுமற்ற
வெறுமையில் கிடக்கின்றன..
வெயில் விழுங்குதல் போல விரியும் பகலை
உற்றுப்பார்த்த வண்ணம் இருக்கிறேன்
ஒரு பறவையின் சிறகில் மறைகிறது பகல்..
முதுகிற்குப் பின்னால் அமர்ந்துகொண்டிருந்த அந்தி
நழுவித் தவழும் இனிமையோடு
சந்தித்துக் கொள்கின்றன..
பறவையின் சிறகுகளில்
மிதக்கின்றன சொற்கள்..
வானில் விரிகிறது கவிதை..



சங்கரி சிவகணேசன்

## யாவும் வஞ்சம்



இன்னமும் எத்தனை காலம் தான்
இந்த கூட்டுக் கூத்து
இனத்தின் மீது இரக்கமென்பதாய் எம்மினம்
சிந்திய ரத்தமும்
சொரிந்த கண்ணீரும்
பிரிந்த உறவுகளும்
ஒரு விடியலுக்கான
விலையில்லா விதைகள் என்பதையே
விலையாக்கி,
தேர்தல் திருவிழாவில்
கொஞ்சி குலாவி
தேன் நிலவு காண
பொய்யான தேசியம் புலம்பி
நம் காலத்தை கரைத்தவர்களே!
கை கொடுக்க காத்திருக்கின்றோம்
என்ற கற்பனை கோட்டைக்குள்
கன்னை பிரித்து கண்ணாம்பூச்சியாடி
புதிதாய் ஒரு வண்ணமடித்து
மறுபடியும் வருவீர்களா,
வரிசை கட்டி
நம் காதில் பூச்சுற்ற

தேன்நிலா

## முதுமை பேணுவோம்

வாழும் பண்பாடு
வாடி விட்டதோ?
புதிய தளிரும் சருகாகும்
மழைநீரில் காட்டாறு
கரை புரண்டாலும்
கோடை வெம்மையில்
கால்சுடும் மணல் தரும்
வாலிபத்தின் நிமிர்நடை
வயோதிபத்தில் கூனி விடும்
அன்பிற்காய் தவமிருப்போரை
அன்பெனும் வரம் தருவோம்
அன்பை விதைத்து
அன்பை அறுடை செய்ய



கலாபூசணம்
பரந்தாமன்-தமிழினியன்,
வவுனியா.

## மௌனத்தின் தேடல்-733



## முப்பெரும் தரிசனங்கள்

இந்த முப்பெரும் தெய்வங்களையும்
இந்த மனித வாழ்வில் முறையே
அநுட்டித்து தொழுது வந்தாலோ
மனித வாழ்வின் முப்பெரும்
செல்வங்களும் தான்
இம்மானிடத்தில் பலகிப் பெருகிடாதோ
தங்கத்தமிழன், காரைநகர்.

## மௌனத்தின் தேடல்- 734



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

## கல்வியே வாழ்க்கை

கல்வியே வாழ்க்கையை
தீர்மானிக்கும் என்பதால்
இப்படி மொழியை
பாலகர்களுக்கு
விதைத்து விட்டால்
பயிராகி இப்பாரிற்கு
நல்ல அறுவடையை
தருவார்கள்

துணவியூர் நடா

## சக்தியும் பக்தியும்

சிவனாருக்கு நெற்றிக்கண் போன்று
விழித்திருக்கும் சிவராத்திரி ஒன்று
சக்திக்கு நவரத்தினங்கள் போன்று
பக்திப் பரவசமான ராத்திரிகள்
செல்லும் இடமெங்கும் சிறப்பைத் தரும்
கல்விச் செல்வம் வீரத்திற்கும் சரிசமமாய்
மூன்மாதிரியான அதிகாரப் பகிர்வாய்
முப்பெரும் தேவியருக்கும் மூன்று மூன்று
இந்தப்பத்து ராத்திரிகளையும் தவறாமல்
சொந்த பந்தங்களுடன் கடைப்பிடித்தால்
தொல்லை யாவும் விலகிச் செல்லும்
நல்லவை எல்லாம் நாடி வரும்
க.நாகராசா, நுணாவில்.

## கொலுவிருக்கும் தேவிமார்


முத்தேவிகளுக்கும் கொலு அமைத்து
கரம் துதித்து கவியாடும்
நவ தினங்கள்
மகிமை தரும் கல்வியும்
குன்றாச் செல்வமும்
நியாயம் இணைந்த வீரமும்
அகிலம் எல்லாம் வழங்கி வரும்
அன்னையரைத் துதிக்கின்றோம்
சிறுமதி கொண்ட பாலர் நமக்கு
எதிர்காலம் சிறக்க
பெருமதி வளர்த்து சகல பேறுகளையும்
தந்து நற்பிரசைகளாக
வழிகாட்டுங்கள் தாயே
நாம் ஆரம்பிக்கும் கல்வி கலை அனைத்
தையும் வெற்றி பெற விஜயதசமியை
எம்மை அரவணைக்கட்டும்
அபிருலமாலிகா, சித்தன்கேணி.

## குழந்தையும் தெய்வமும் ஒன்று

சிறுபிள்ளைகள் தெய்வத்தின்
படத்தை பார்த்து பக்தி எனும் ஈர்ப்பில் உள்ளனர்
இது கண்களுக்கு இனிமையாகவும்
அழகாகவும் இருப்பதனால் மெய்மறந்து பார்க்கின்றனர் போல
த.விஜயையன், துணைவியூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




பிற்பகல் 3 மணி இருக்கும் திடீரென காற்று சற்று அடங்கி பின்னர் விர்ரெனக் கிளம்பியது. எதிர்பாராத விதமாகப் பலத்த காற்று, சூறாவளியாக உருவெடுத்தது. ஆம், யாழ்ப்பாணக் குடா நாட்டைப் பெரும் சூறாவளி ஒன்று தாக்கியது.

முற்றவெளியில் குடைந்து, சுழன்று வீசியடித்தக் காற்றுக்கு ஈடு கொடுக்க முடியாமல், கதிரைப் பல்லக்குகள் இரண்டும் தூக்கியெறியப்பட்டன. ஒல்லாந்தச் சீமாட்டிகள் இருவரும் அலமலக்காகச் சரிந்து விழுந்தனர். குதிரையில் பவனிவந்த கோட்டைக் கம்மாந்தர் நிலத்தில் தள்ளப்பட்டு குப்புற விழுந்தான்.

அடிமைகள் நிலத்தோடு படுத்துக் கொண்டனர் சூறாவளி தூக்கியெறிந்தமைக்காக. கதிரைப் பல்லக்குக் காவிகள் நால்வருக்கும் திருக்கை வாற்சவுக்கால் "அலுகோசுகள்" ஆறாறு அடிகள், தசை பிரிய வழங்கினார்கள்.

பண்ணைக்கடலில், கோட்டைக்கு எதிரில் நங்கூரமிட்டிருந்த மரக்கலங்கள் மூன்று ஒன்றுடன் மோதி நொறுங்குண்டன. கடல் நீர் மட்டம் உயர்ந்து கோட்டை அகழிக்குள் வேகமாக புகுந்தது.

அதனால் தொங்குபாலம் உயர்த்தப்பட்டது. கோட்டைக்குள்ளிருந்த தேவாலயத்தில் பீலி ஓடுகள இலைச்சருகுகளாக பறந்து போயின. பாசறைகளின் கூரைகளும், அகிகாரிகளின் மாளிகைக் கூரைகளும் சிதைந்துபோயின. சூறாவளியின் தாக்கம் மறுநாளும், நவம்பர் 5, 1669 இருந்தது.

யாழ்ப்பாணக் கோட்டை என்றுமில்லாத பரபரப்பிற்கள்ளாகியது. ஆங்கிலேயரின் படைக்கப்பல்கள் பருத்தித்துறையில் நங்கூரமிட்டு தரையிறங்கி அணிவகுத்துவிட்டன என்ற செய்தி கோட்டைக்குள்ளும் சீதாரயிலும் வாழ்ந்த ஒல்லாந்தப் பறங்கிகளுக்குப் பேரிடியாக இறங்கியது. திருகோணமலைக் கோட்டையைக் கைப்பற்றிய ஆங்கிலேயப் படை பருத்தித்துறையில் வந்திறங்கியது.

ஸ்ரூவார்ட் என்பானின் தலைமையில் வந்திறங்கிய படையில் ஒரு பகுதியினர் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டை நோக்கியும், ஒரு பகுதியினர் கப்பல் மூலம் ஊர்காவற்றுறையூடாகக் கடனீரேரிக்குள்ளும் புகுந்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டை மீண்டும் முற்றுகைக்குள்ளானது. ஆயிரக்கணக்கான ஆங்கிலேயரின் படை முன்பு, நூற்றுக்கணக்கான ஒல்லாந்தர் படை எம்மட்டு? ஒல்லாந்தர் கோட்டையை ஆங்கிலேயரிடம் யுத்தமின்றியே கையளித்து விட்டு வெளியேற நேர்ந்தது.

கோட்டைக்குள் ஆங்கிலேயர் குடி புகுந்தனர்.

(தொடரும்...)

---

# கடல் புறா




காலத்தின் பதிவு 127

## குடிப் பழக்கம்

அதை நீங்களும் உணர்ந்து கொண்டீர்கள் மரக்கலத்தைப் பார்த்தவுடன். ஆம் புரிந்து கொண்டேன். மரக்கலத்தளத்தைப் பிரித்தால் திரும்ப அமைக்க ஒரு மாத காலமாவது பிடிக்கும்.

அந்த ஒரு மாத காலம் இளையபல்லவர் இங்கிருந்து நகர முடியாது. "ஒரு மாத காலம் கடலிலும் கோட்டையிலும் நமக்கு நிம்மதி இருக்குமா?"

"இருக்காது." "பூர்வகுடிகள்" "நிலத்திலும் தாக்குவார்கள் நீரிலும் தாக்குவார்கள். மஞ்சளழுகியின் இந்தப் பதிலைக் கேட்டுக் திகைத்த கண்டியத்தேவன். இந்த மரக்கலம் பெரும் பலமுடையது தேவி! நான்கு போர்க் கப்பல்களை இதைக் கொண்டு சமாளிக்கலாம்.

ஆனால் இதைப் பிரித்துவிட்டேன். இனி கடலில் நாங்கள் சிறகிழந்த பட்சிகள். கோட்டை நிலைமை எனக்குத் தெரியாது என்றான்.

அங்கு நிலைமை சரியல்லவென்பதைப் புரிந்து கொண்டாள் மஞ்சளழகி. குடிப்பழக்கமில்லாத இளைய பல்லவன் விழிப்புடனிருக்க முடியும். பூர்வக்குடிகள் எதிர்ப்பைச் சமாளிக்க முடியும். ஆனால் குடித்து அறிவிழந்த தலைவர் என்ன செய்ய முடியும்! இதோ தளம் பிரிக்கப்படும் மரக்கலம் போலத்தான் அவரும். தளமிழந்த கப்பலும், மதியிழந்த தளபதியும் ஒன்றுதான் என்று எண்ணமிட்ட மஞ்சளழகி பெருமூச்செறிந்தாள். இளையபல்லவனின் மதியிழந்த நிலையைத் தந்தை கண்டிப்பாய் உபயோகித்துக் கொள்வார் என்று நினைத்துப் பெரும் வேதனைக்கும் உள்ளானாள். அப்படி வேதனைப்பட்டு நின்ற நிலையில் பின்னாலிருந்து மகாராண்ணி! என்று வந்தகுரலைக் கேட்டுச் சரேலெனத் திரும்பிய அக்ஷயமுனைக் கோட்டை அழகி தன் பின்னால் சிரிப்புடன் இளைய பல்லவன் நிற்பதைக் கண்டு ஒருகணம் ஸ்தம்பித்தாள். அடுத்த விநாடி மிகுந்த சீற்றத்துடன் கேட்டாள். நான் மகாராணியா? என்று.

ஆம், என்றான் இளையபல்லவன். யார் சொன்னது? நான் சொல்கிறேன். எந்த ராஜ்யத்துக்கு நான் ராணி? என் மனராஜ்யத்துக்கு. வீண் மனோராஜ்யம்? மனோராஜ்யங்கள் பலிப்பது உண்டு. என் இதயராணி வா இப்படி!

அவள் வரவில்லை. அவனைக் கடந்து விடுவிடுவென்று கோட்டையை நோக்கி நடந்தாள். அவள் போவதைப் பார்த்துக்கொண்டே நின்றான் இளைய பல்லவன். அந்தச் சமயத்தில் படைத் தலைவனின் முகத்தில் புரியாத ஏதோ ஓர் ஒளி, அளவிட முடியாத ஏதோ ஓர் ஆழமான பார்வை படர்ந்து கிடப்பதைக் கண்டியத்தேவன் கண்டான். அவன் ஊகத்துக்குத் துணை செய்வதுபோல் உதிர்ந்தன படைத்தலைவன் வாயிலிருந்து சொற்களும். நீ மகாராணி ஆகலாம் மஞ்சளழகி! ஆனால் உனக்கு அதிஷ்டமில்லை என்று கூறிய இளைய பல்லவன் பெருமூச்செறிந்தான். பிறகு வெகு வேகத்துடன் கண்டியத்தேவனை நோக்கி. "[illegible] தேவரே?" என்றழைத்துக் கொண்டு மரக்கல்த்தை நோக்கி விரைந்தான்.

மரக்கலத்துக்கு அருகே வந்த பிறகும் இளைய பல்லவன் முகத்தில் ஆழமான பார்வையே விரிந்து கிடந்ததைக் கண்ட கண்டியத்தேவன், படைத்தலைவன் இதயத்தில் ஏதோ பெரும் ரகசியமொன்று புகுந்துகொண்டிருப்பதைப் புரிந்து கொண்டானாலும் அந்த ரகசியம் என்னவாயிருக்க முடியும் என்பதை உணர முடியாததால் படைத்தலைவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். சிறிது நேரம் கழித்து அவனை நோக்கித் திரும்பிய படைத்தலைவனின் முகத்தில் புன்முறுவலில்லை. மதுவெறியுமில்லை. மிதமிஞ்சிய கவலையே மண்டிக்கிடந்தது. மரக்கலத்தை மாற்றியமைக்க எத்தனை நாளாகும் தேவரே?" என்ற இளையபல்லவன் கேள்வியிலும் அந்தக் கவலை பிரதிபலித்தது."ஒரு மாத காலம் ஆகும். அதற்குக் குறைவில்லை." என் றான் தேவன். இளையபல்லவன் சில விநாடிகள் ஏதோ யோசித் தான். ஆகலாம் ஆகட்டும். ஒரு மாத காலம்தான் உமக்குக் கொடுக்க முடியும். என்றான். அதற்குப் பின்? சட்டென்று வந்தது இளைய பல்லவனின் பதில்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

419

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# தவறான முடிவுகளை சரிசெய்துகொள்வது தோல்வி என்று அர்த்தப்படாது

ஒவ்வொரு தடவையும் கோபப் படும் பொழுது நாம் தோற்று விடுகிறோம். கோபத்தை ஏற்படுத் திய அந்தச் சூழ்நிலை எம்மை வெற்றி கொள்கிறது.

கோபமான நிலையில் எமது புத்தி மங்கி சாதுரியம் குன்றி மனதாலும், உடலாலும் பிழையான தீர்மானங்கள் எடுக்கும் ஒரு பலவீனமான நிலைக்குத்தள்ளப்படு கிறோம்.

வாழ்க்கை உண்மையில் எளிமையானது. நாமே அதனை சிக்கல்கள் நிறைந்ததாக மாற் றிக்கொள்கிறோம். சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு எமது வாதிடும் குணாதிசயமும் கோபப்படும் தன்மையுமே பிரதானமான காரணமாக அமைகின்றது.

ஒரு விடயத்தை உணரக் கூடிய திறமைசாலிகள் என்று நாம் கருதுபவர்களுடன் மட்டும் வாதிடுவோம். எமது கருத்துக் களை வலியுறுத்திச் சொல்லு வோம். அவ்வாறானவர்கள் அல்ல என நாம் கருதுபவர் களுடன் வாதிட்டு நாமும் காயப் பட்டு மற்றவர்களையும் காயப் படுத்தும் முயற்சி எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அமைதியாக இருப்பது ஆமோ திப்பது என்று அர்த்தப்படாது. பேசிப்பயன்தராது என்று நினைக் கின்றபொழுது அல்லது உண்மை துலங்கக் காலம் கனிய வேண் டும் என்ற நிலை இருக்கும் பொழுது அமைதி சிலசமயம் மிகப்பொருத்தமான ஆயுதமாக இருக்கலாம்.

எமது இலக்கை நோக்கிய பாதையில் நின்று குரைக்கும் ஒவ்வொரு நாய்களுக்கும் கல் லெறிய முற்படுவோமாயின் எமது பயணம் முற்றுப்பெற மாட்டாது என்று அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதே போலத்தான் வாழ்வில் ஏற்படும் இடையூறுகள் ஒவ்வொன்றுடனும் மோத முற்படுவோமாயின் எமது இலக்கை அடையமுடியாது.

இன்று ஒருவன் பலம் பொருந் தியவன் போலத்தோற்றப்படலாம். ஆனால் காலச்சக்கரத்தின் கரங்கள் மிகமிகப் பலமானது. காலம் மாற, காலம்கனிய கனகாலம் ஆகாது.

விடயங்களை அமைதியாகவும் உணர்வு பூர்வமாகவும் அணுக பழகிக்கொள்ளும் பயிற்சி பயனு டையதாக அமையும். அந்தப்பயிற்சி அமைதியான முன்னோக்கிய பய ணத்திற்கு உறுதுணையாக அமை யும்.

எமது பயணத்தின்பொழுது எம் மீது கல்லெறிகள் விழலாம். அவற்றை எடுத்து திருப்பி எறிந்து அந்தக் கற்களை வீணடிப்பது புத்தி சாதுரியம் ஆகாது. அந்தக் கற் களைக் கொண்டே எமது பாதையை செப்பனிட முயலுவோம். எமது பாதைக்கு உரம் சேர்ப்போம்.

எந்தப்பாதையில் பயணிப்பது என்ற தடுமாற்றம் தேவை அற்றது. மன உறுதியும் மனச்சாட்சியுடன் கூடிய உழைப்பும் இருக்குமாயின் நாம் பயணித்துக்கொண்டிருக்கும் பாதையே சரியான பாதையாக அமையும்.

எமது பயணத்தின் பொழுது காலம் பலவற்றை எமக்கு கற்றுத் தரும்.நாம் எப்பொழுதும் கற்பதை நிறுத்தி விடமுடியாது. அதுவே எமது முன்னேற்றத்தின் உயிர் மூச்சு. இது புத்தகக் கல்வி என்று அர்த்தப்படாது. ஏமாற்றங்கள், இழப்புகள், வறுமை, ஏன் பசிகூட எமக்கு பலவற்றை கற்றுத்தரும். எம்மை பக்குவப்படுத் தும்.



காலம் எடுப்பது தோல்வி என்று ஆகிவிடாது. எமது உண்மையான நோக்கங்களை நோக்கி அமைதி யாக எடுத்துவைக்கும் ஒவ்வொரு காற்தடங்களும் வெற்றிக்கான பதிவுகளே. வாழ்க்கை குறுகியது. இந்தக் குறுகிய வெளியில் பகை வளர்த்து நேரத்தை வீணடிப்பது வெற்றிக்கு இடையூறாக அமை யும்.

எம்மிடம் இருந்தவற்றை நாம் இழந்து விடும் பொழுது வேதனைப் படுகிறோம். கோபப்படுகிறோம். மனவிரக்தி அடைந்து தோல்வி மனோநிலைக்கு ஆட்படுகிறோம். ஆனால் அவை எம்மிடம் இருந்த காலத்தில் அவற்றை எண்ணி மகிழ்ச்சி அடைந்திருக்கிறோமா என்று எண்ணிப்பார்ப்போமாக இருந்தால் அந்தக் காலத்திலே அவை சம்பந்தமாக நாம் அக்கறை அற்றவர்களாக இருந்திருப்பது புலப்படும்.

எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சி அடையத் தெரியாமல் அவற்றை இழக்கும் பொழுது மட்டும் வேதனைப்படும் மனநிலை விசித்திரமானது. எம் மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சியும் திருப்தியும் அடையும் மனநிலையை வளர்த்துக்கொள்ளும் பயிற்சி வெற்றிக்கு வித்திடும்.

நாம் உணர்ச்சி வசப்பட்ட தாலோ தவறாக வழிநடத்தப் பட்டதாலோ எடுத்த தவறான முடிவுகளை சரி செய்துகொள்வது தோல்வி என்று அர்த்தப்படாது. சிலரை தவறாக புரிந்துகொண்டு பிரிந்து விடுகிறோம். வேறு சில தவறானவர்களை சரியாகப் புரிந்து கொள்ளாததால் அவர் களுடன் நெருங்கி அதன்கார ணமாக நொந்து பேசிறோம்.


**Dr. சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிப் வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்-2024

## சிந்தித்துச் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்



**கிரகநிலை**

தைரிய வீரிய ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - சுக ஸ்தானத்தில் ராஹு - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு - களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் புதன் - தொழில் ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:**

06-10-2024 அன்று புதன் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.23-10-2024 அன்று செவ்வாய் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்:**

இந்த மாதம் இராசியாதிபதி குரு ராசிக்கு ஆறில் வக்கிரம் பெற்று சஞ்சாரம் செய்வதால் பணவரத்து திருப்தி தரும். எதிர்பாராத திருப்பம் உண்டாகும். சிந்தித்து செயற்படுவது காரிய வெற்றிக்கு உதவும். இராசிக்கு ஏழில் செவ்வாய் சஞ்சாரம் இருப்பதால் பயணங்களின் போதும் வாகனங்களை ஓட்டி செல்லும் போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் வருமானம் வழக்கம் போல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து நிதானமாக நடந்து கொள்வது வியாபாரம் நன்கு நடக்க உதவும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் நல்ல பலன் தரும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். உறவினர்களுடன் அனுசரித்து செல்வதும், வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நல்லது. பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது நல்லது.

பெண்களுக்கு எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கலைத் துறையினருக்கு பொருளாதார மேன்மை காணப்படும். அரசியல் துறையினருக்கு காரியங்கள் வேகம் பிடிக்கும். மாணவர்கள் சக மாணவர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. கவனத்தை சிதறவிடாமல் படிப்பது அவசியம்.




**மூலம்:**

இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை வளரவிடாமல் சமாளித்து விடுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இடைவெளி காணப்படும். பிள்ளைகள் புத்தி சாதுர்யமாக நடந்து கொள்வது மன மகிழ்ச்சியை தரும்.

**பூராடம்:**

இந்த மாதம் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் திட்டமிட்டபடி பாடங்களை படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவீர்கள். உயர்கல்விக்காக எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன்தரும்.

**உத்திராடம்:**

இந்த மாதம் இரகசியங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதால் பல காரிய தடைகளை சந்திப்பீர்கள். வீண் வாக்குவாதங்கள், அதன்மூலம் பிறரிடத்தில் பகை போன்றவை உண்டாகலாம். மனோதைரியம் அதிகரிக்கும். செலவுக்கு ஏற்ற வரவும் இருக்கும்.

**பரிகாரம்:**

சிவபெருமானை வணங்குவது நன்மையைத் தரும். தடைப்பட்ட காரியம் தடை நீங்கி நடக்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:**
திங்கள், செவ்வாய், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:**
24, 25, 26

**அதிஷ்ட தினங்கள்:**
18,19

## கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்



**கிரகநிலை:**

தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - தைரிய வீரிய ஸ்தானத்தில் ராஹு - பஞ்சம ஸ்தானத்தில் குரு - ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் - அஷ்டம ஸ்தானத்தில் புதன் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது என கிரக நிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:**

06-10-2024 அன்று புதன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 23-10-2024 அன்று செவ்வாய் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்:**

இந்த மாதம் யோககாரகன் சுக்கிரன் மிக அனுகூலமாக இருக்கிறார். வீண்செலவுகள் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். எனவே முன் திட்டமிடல் அவசியம். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு வலிய சென்று உதவிகள் செய்வதை தவிர்ப்பது நல்லது. இல்லாத இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்தபடி பணிகளை முடியாமல் மன சங்கடத்திற்கு ஆளாக நேரிடும்.

குடும்பத்தில் இருப்பவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பாடுபடுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே வெளியில் சொல்ல முடியாத மனக்குறைகள் வரலாம். பிள்ளைகள் கல்வி மற்றும் அவர்கள் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். பெண்களுக்கு விருப்பம் இல்லாமல் பயணம் செல்ல நேரிடலாம். கலைத்துறையினருக்கு யோகம் ஏற்படும். அரசியல் துறையினருக்கு எதிலும் கவனம் தேவை. மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் அதிகரிக்கும்.




**உத்திராடம்:**

இந்த மாதம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்களது பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. வாகனங்களால் செலவு ஏற்படும். தந்தையுடன் கருத்து வேற்றுமை வரலாம். சொத்துக்களை அடைவதில் தாமதம் ஏற்படும்.

**திருவோணம்:**

இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் லாபம் கிடைப்பது குறையலாம். சரக்குகளை விற்பதில் மிகவும் வேகம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரம் விரிவாக்கம் செய்வது தொடர்பாக முக்கிய முடிவு எடுப்பீர்கள்.

**அவிட்டம்:**

இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி வரலாம். சக ஊழியர்களின் உதவியும் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடுகளில் கவனம் தேவை.

**பரிகாரம்:**

சனிக்கிழமையில் சனி பகவானுக்கு எள் சாதம் நைவேதியம் செய்ய காரிய தடை, எதிர்ப்புகள் அகலும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும். 0

**அதிஷ்ட கிழமைகள்:**
புதன் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:**
1, 27, 28


**அதிஷ்ட தினங்கள்:**
20, 21

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமபிதா காட்டிய பாதை

### நீயா? நானா?வை நிறுத்தி நாமாகுவோமா?



பைபிளின் நற்செய்தியில் மாற்கு 10:02-16 பகுதி இன்று தரப்படுகின்றது. இயேசுவின் கருத்து வழியாக குற்றம் காணலாம் என்கிற குறுகிய நோக்குடன் பரிசேயருள் ஒரு சிலர் "மணவிலக்கு" குறித்துக் கேட்பதற்காக கூடிவருகின்றனர்.

உலகமயமாக்கல் உலகில் வாழும் எமக்கு உத்தரவாதம் அதாவது (வொரண்டி) என்பது பற்றி நன்கு தெரியும். என்ன பொருளை வாங்கினாலும் உத்தரவாதத்தைப் பற்றி இன்று பேசுகிறோம். உத்தரவாதம் பெற்ற பொருள் சரியில்லை என்றால் திருப்பிக் கொடுத்துவிட்டு மீண்டும் மாற்றி வேறு ஒன்று வாங்கி வருகிறோம்.

திருமண உறவில், வாழ்வில் இப்படி மாற்ற முடியுமா? இக்கேள்விதான் இன்றைய பைபிள் பகுதியின் பின்னணி. பரிசேயர் இயேசுவிடம் கேட்கும் கேள்வி இது: "கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?" மனைவி ஏதோ ஒரு பொருள் போலவும் அந்தப் பொருளை ஆண்கள் திருப்பிக் கொடுப்பது போலவும் இக்கேள்வி எமக்குத் தென்படுகிறது. இயேசுவைச் சோதிக்கவே இந்தக் கேள்வி கேட்கப்பட்டது என்பது எமக்கு நன்கு தெரியும்.

இக்கேள்வி கேட்கப்பட்ட காலத்தில் ஏரோது அந்திபாசு தனது முதல் மனைவியை விலக்கி வைத்துவிட்டு ஏரோதியாவை மணந்து கொண்டிருந்தான். இயேசுவின் பதிலை பொறுத்து ஏரோதுவின் கோபத்திற்கு இயேசு ஆளாகநேரிடும். அரசருக்கு எதிராகப் பழித்துப் பேசுகிறான் என இயேசு மீது குற்றம் சாட்டி திருமுழுக்கு யோவானைப் போலவே இயேசுவையும் நிரந்தரமாக ஒழித்துக் கட்டிவிடலாம் என்று அவர்கள் கபடசிந்தனையுடன் கேட்ட கேள்வியிது.

கேப்பவர்கள்எந்தக்கோணத்தில் கேட்டாலும் இயேசுவுக்குக் கவலையில்லை. சமுதாயம் நல்ல உண்மைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என பதில் எப்போதும் குறியாய் இருந்த இயேசு, இத்தருணங்களை எல்லாம் பயன்படுத்திக் கொண்டார். பெண்கள் பொருட்களைப் போலவே நடத்தப்படடனர். மக்கள் மத்தியில் பெண்களுக்குக் அன்று கொடுக்கப்பட்டிருந்த சமூக நிலை சரியானது அல்ல என இயேசு கோடிட்டுக் காட்டுகிறார்.

இங்கு ஒரு சம்பவத்தை குறிப்பிடுவது சாலப்பொருத்தம். 80 வயது நிறைந்த ஒரு முதியவர் 8.30 மணிக்கு அன்று மருத்தவமனைக்கு அவசரமாக வந்து தன் கையில் போடப்பட்ட இழைக் கட்டை தாமதமின்றி அவிழ்க்குமாறு கேட்டுக்கொண்டார். சிறிது நேரம் அவரைக் காத்திருக்கச் சொன்ன தாதியரிடம் அவர் 9மணிக்கு ஓர் அவசர வேலை உள்ளதென்றும், தனக்கு உடனே உதவும்படி கேட்டுகொண்டார். தாதியர் அவரதுகட்டை அவிழ்த்துக் கொண்டிருக்கும்போது அவருடைய அவசர வேலையைப் பற்றி கேட்டார். "அருகிலிருக்கும் மற்றொரு மருத்துவமனைக்குச் சென்று, தன் மனைவியுடன் காலையுணவு அருந்த வேண்டும் என்றார் அவர்." "நீங்கள் தாமதமாகச் சென்றால், மனைவி கோபித்துக்கொள்வாரோ என்று தாதி கேட்டதும்", முதியவர் சிரித்தார்.

பின் "என் மனைவி Alzheimer நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். எனவே, கடந்த ஐந்து ஆண்டுகளாக அவருக்கு நான் யார் என்பது கூடத் தெரியாது" என்றார். தாதி "நீங்கள் யாரென்றே தெரியாமல் இருக்கும் உங்கள் மனைவியை ஒவ்வொரு நாளும் பார்க்கச் செல்கிறீர்களா?" என்று தன் ஆச்சரியத்தை வெளியிட்டார். அதற்கு அந்த முதியவர், தன் புன்னகை மாறாமல் "மனைவிக்குத்தான் என்னைத் தெரியாது, ஆனால், எனக்கு அவரை நன்கு தெரியும்" என்று கூறினார். கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்கிக்கொண்டு தாதி அந்த முதியவருக்கு உதவிகள் செய்து அனுப்பினார்.

நவீனத்துவ இன்றைய உலகில் பல திருமண உறவுகள் விவாகரத்துகள் என விரிந்து கொண்டே செல்கின்றன. திருமணங்களின் முறிவு மனித வாழ்வின் சீரழிவின் அடையாளம். திருமணத்தின்பின், இறுதிவரை இணைந்து வாழும்போது மனித சமுதாயத்தின் தலைமுறை வளரும்

பல விவாகரத்துகளின் வேர்களைத் தேடினால் உறவுகளின் பிரச்சினைகளை பார்க்கலாம். இந்தப் பிரச்சினைகளுக்கு ஆணிவேராக இருப்பது நீயா?, நானா? யார் பெரியவர்? என்ற கேள்விதான். விவாகரத்து சம்பந்தப்பட்ட சட்டத்தில் பைபிளில் இயேசு கூறும் மிக முக்கியமான சட்டம்: "மரணம் வரும் வரை இணைந்திருக்க வேண்டும்". ஆணா, பெண்ணா, நீயா?, நானா?, யார் பெரியவர் என்ற கேள்வியை எழுப்பாமல், இருவரும் இணை என்று உணரும்போது, திருமண வாழ்க்கைப் பிரச்சினைகள் தீர வழியுண்டு. இன்பத்திலும் துன்பத்திலும், உடல் நலத்திலும் நோயிலும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாக இருப்போம் என இறை சமூகத்தின் முன் உறுதிமொழி எடுக்கப்பட்டு இன்பமாக தொடங்கப்படும் இல்வாழ்க்கை அற்ப காரணங்களுக்காக இறுதிவரை பிரியாது இன்பத்துடன் வாழ்வோம்.

ம.பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்.

# வேட்புமனு தாக்கலின் போது பட்டாசு வெடிக்கத் தடை

## பிரதிப் பொலிஸ்மா அதிபர்




(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் தினங்களில் வீதிகளில் பட்டாசுகளை வெடித்து மக்களை ஒடுக்கும் வகையில் செயற்படுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் தினங்களில் வீதிகளில் ஒலி பெருக்கிகளை பயன்படுத்த அனுமதிபெற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# லங்கா சதொசவின் புதிய தலைவராக சமித்த

(கொழும்பு)

லங்கா சதொசவின் புதிய தலைவராக கலாநிதி சமித்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

அவரது நியமனம் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவினால் வழங்கப்பட்டுள்ளது. (நி)

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் கவனம் செலுத்தியுள்ள சுவீடன்



(கொழும்பு)

சுவீடன் அரசாங்கம் இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை அபிவிருத்தி செய்வதிலும், சுவீடனில் உள்ள இலங்கை மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் மற்றும் வீசா சிரமங்களைக் குறைப்பதிலும் கவனம் செலுத்தி வருவதாக இலங்கைக்கான சுவீடன் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சுவீடன் தூதுவர் நேற்று முன்தினம் பிரதமர் ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார். புதிய பிரதமராக ஹரிணி அமரசூரிய நியமிக்கப்பட்டமைக்கு சுவீடன் அரசாங்கத்தின் வாழ்த்துக்களை தூதுவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் உணவு பாதுகாப்பு தொடர்பில் சுவீடன் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறுவர் போஷாக்கு பிரச்சினையை சுவீடன் தூதுவரின் கவனத்திற்கு கொண்டு வந்த பிரதமர், இலங்கை பிராந்தியத்தில் உயர் சுகாதார குறிகாட்டிகளை பேணி வருகின்ற போதிலும், பாடசாலை மாணவர்கள் மத்தியில் போசாக்கு சவால்கள் இன்னும் காணப்படுவதாக வலியுறுத்தினார். (நி)

# அரச பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாட்டின் பல்கலைக் கழக அமைப்பில் 12,992 விரிவுரையாளர்கள் காணப்பட வேண்டியு நிலையில், இன்று வரை 6,548 விரிவுரையாளர்கள் மாத்திரமே பணியில் ஈடுபட்டிருப்பதாக பல்கலைக்கழக மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி அரச பல்கலைக்கழகங்களில் 6,444 விரிவுரையாளர்கள் பற்றாக் குறையாகக் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில், சில பல்கலைக்கழக பாடநெறிகளை நிறுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மாணவர் அமைப்பு குறிப்பிடுகின்றது.

அத்துடன் தற்போதுள்ள பிரச்சினைக்கு தீர்வுகாணாமல் அதிக தேவை உள்ள பாடங்களுக்கு மாணவர் சேர்க்கையை மட்டுப்படுத்த சில அதிகாரிகள் முன்மொழிவதாகவும் மாணவர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியல் என்றாலே வேண்டாம் எனும் அளவுக்கு...

பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதுதான் தாமதம் தேர்தல் பறவைகள் சுவட்டம் சுவட்டமாக நாலா திசையில் இருந்தும் வரத் தொடங்கியுள்ளன.

அரசியல் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் என்றவாறு தமிழ் அரசியலில் வேட்பாளர்கள் களமிறங்கும்போது, கடவுளே! இன்னமும் நம்அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் பற்றியோ தமிழர்களின் உரிமை பற்றியோ சிந்திக்கவில்லை.

மாறாக, பாராளுமன்றத் தேர்தல் ஊடாக, பதவிகளைப் பெறுவது மட்டுமே அவர்களின் இலக்காக உள்ளது என்பதை உணர முடிகிறது.

அதிலும் மிகப்பெரும் கொடுமை. தேர்தலில் நிறுத்தப்படும் வேட்பாளர்களின் தகைமை பற்றியோ அன்றி அவர்களின் மக்கள் பணி பற்றியோ ஆராயாமல், எவரை வேட்பாளராக நிறுத்தினால், அவர் தனக்குப் பக்கபலமாக இருப்பார் என்ற நோக்கில் வேட்பாளர்களை நிறுத்தும்போது நிலைமை அடியோடு புரண்டு போகிறது.

இங்குதான் தமிழினத்தில் இந்தளவு தூரம் அரசியல் பிளவுகள் உண்டா என்று ஏங்குகின்ற அளவில் நிலைமை வந்துவிடுகிறது.

சரி, இவர்களை எப்படியாவது ஒற்றுமைப் படுத்த முடியாதா? என்றால், இல்லவே இல்லை.

ஆளுக்கு ஆள் கன்னை பிரிந்து தேர்தல் களத்தில் இறங்கத் தயாராகிவிட்டனர்.

தமக்கு வெற்றி இல்லை என்பது தெரிந்தும் தேர்தலில் போட்டியிடுகின்ற அளவுக்கு தேர்தல் ஒரு போதைப்பொருளாகிவிட்டதோ என்று நினைக்குமளவுக்கு களநிலை உள்ளது.

இவ்வாறு பல கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் களமிறங்கும்போது, அரசியல் தொடர்பில் தமிழ் மக்கள் வெறுப்படைவர்.

இவ்வாறான வெறுப்பு நிலை வாக்களிக்கின்ற மக்களின் மனநிலையைப் பாதிக்க, வாக்களிப்பு வீதம் கடுமையாகக் குறைந்து போகும்.

அதாவது தேர்தல் களத்தில் நேர்மையானவர்கள் நின்றாலும்கூட, எல்லாமும் ஒன்றுதான் என்ற மனநிலை மக்களிடம் ஏற்படும்போது, அரசியல் மீதான ஆர்வமும் பற்றும் கரிசனையும் இல்லாமல்போய், மக்கள் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வர்.

இத்தகைய சூழமைவு அண்மைக்காலமாகத் தமிழர் தாயகத்தில் ஏற்பட்டிருந்தாலும் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் கொட்டி முழக்க, ஐயா! சாமி ஆளைவிடு என்று ஓடி ஒழிக்கின்ற நிலையே நம் தமிழ் அரசியலில் உருவாகும்.

## தமிழரசுக்கட்சி ஒரு தேசியப் பட்டியலுக்காக
# இரு பிரதிநிதிகளை இழக்கும் நிலையை ஏற்படுத்தப்போகின்றார்கள்
## சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

தமிழரசுக் கட்சியானது ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்திற்காக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இரு பிரதிநிதிகளை இழக்கும்நிலையினை ஏற்படுத்தப் போவதாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம் வவுனியாவில் நேற்று இடம் பெற்றது.

அதன்பின்னர் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் பொதுக் கட்டமைப்பானது தொடர்ந்தும் பணியாற்றும் என்பதை நாம் இரு தரப்பும் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் இந்த பாராளுமன்ற தேர்தலை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பூடாக சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான இறுதி முடிவுகள் விரைவில் அறிவிப்போம்.

நாங்கள் பிரிந்து நிற்பதால் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் தமிழ் பிரதிநிதித்துவத்தை இழந்துவிடும் நிலை இருக்கிறது.

கடந்த முறை அம்பாறையில் அந்த இடத்தை இழந்திருக்கின்றோம். எனவே அங்கு தமிழ் பிரதிநிதிதுத்துவத்தினை காப்பாற்றுவதற்கான இரண்டு வழிமுறைகளை தமிழரசுக் கட்சிக்கு கூறியிருக்கின்றோம்.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவைசேனாதிராசா, செயலாளர் ப.சத்தியலிங்கம் மற்றும் சி.சிறீதரன் ஆகியோருடன் நானும், செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் சித்தார்த்தன் அவர்களும் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டிருந்தோம். எனவே இருதரப்பும் இணைந்து வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் போதே அந்த பிரதிநிதித்துவம் காப்பாற்றப் படும். எனவே ஏழாம் திகதிக்கு முன்னர் உத்தியோக பூர்வமான பதிலை அறிவுக்குமாறு நாம் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

திருகோணமலையில் வீட்டுச் சின்னத்திலும், அம்பாறையில் சங்கு சின்னத்திலும் தேர்தலை கேட்கலாம் என நாம் முன்னர் பேசியிருந்தோம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது அனைத்து இடங்களிலும் தமிழரசுகட்சி தனித்துப் போட்டியிடுவதாக கூறு கிறார்கள். அது நடந்தால் இந்த மாவட்டங்களின் ஆசனங்கள் இழக்கப் படும் நிலையே ஏற்படும்.

இந்த விடயங்களை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஐந்து கட்சிகள் மற்றும் 36ற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி இந்த முடிவிற்கு வந்துள்ளார்கள்.

மாறாக எல்லா இடத்திலும் தாங்களே நிற்க வேண்டும் என்றால் இது பிடிவாதமே. தங்களுக்கு தேசியப் பட்டியலை கூட்டிக் கொள்வதே அவர்களது நோக்கம். ஒரு தேசியபட்டியலுக்காக இரண்டு ஆசனங்களை இழக்கப் போகின்றார்கள். இது போல ஒரு முட்டாள்த்தனமான முடிவு எதுவும் இருக்காது.

அத்துடன், சுமந்திரனுக்கு எவ்வளவு தூரம் வட-கிழக்கு பிரச்சினைகள் புரியுமோ புரியாதோ என்று எனக்கு தெரியாது. ஆனால் மாவை சேனாதிராசா, சிறீதரன் ஆகியோர் இதனை புரிந்துகொள்வார்கள் எனத் தெரிவித்தார். (ம-7,250)

## மிகுதிப்பணம் வழங்காத பஸ் நடத்துனர்கள் மீது முறைப்பாடு செய்யலாம்

(கொழும்பு)

பஸ்ஸில் பயணிகளிடம் கட்டணம் அறவிட்ட பின்னர் அதற்கான பயணச்சீட்டையும் மிகுதிப் பணத்தையும் வழங்காத பஸ் நடத்துனர்கள் தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்ய முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டு, முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## உயிரிழந்த மகனின் பரீட்சை பெறுபேற்றை கேள்வியுற்ற தந்தை மாரடைப்பால் மரணம்

(நீர்கொழும்பு)

உயிரிழந்த மகனின் பரீட்சை பெறுபேற்றை கேள்வியுற்ற தந்தை மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பு பாடசாலையில் கல்வி கற்ற மாணவன் ஒருவன் கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதி இரண்டு நாட்களின் பின் உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்குக்குச் சென்று கொண்டிருந்த போது காரில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த வாரம் கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியிருந்த நிலையில், உயிரிழந்த மாணவனின் பரீட்சை பெறுபேறுகளை கேள்வியுற்ற தந்தை மகன் பரீட்சையில் சித்தியடைந்தும் உயிரோடு இல்லை என்ற அதிர்ச்சியில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் உயிரிழந்துள்ளதாக நீர்கொழும்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## அநுராதபுரம் சிறையிலுள்ள கணவனுக்கு உணவு வழங்க சென்ற மனைவி கைது

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவனுக்கு சூட்சுமமான முறையில் போதைப்பொருள் கலந்த உணவை கொண்டு சென்ற பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம், சுச்சாரித்தாகம பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய பெண்ணொருவரே சிறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். .

போதைப்பொருள் குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவரைப் பார்ப்பதற்காக பெண்ணொருவர் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், குறித்த பெண் கொண்டு சென்ற உணவுப் பொதியில் இருந்த தேங்காய் சம்பலில் போதைப்பொருள் கலந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனைதொடர்ந்து, சந்தேக நபரான பெண் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியும் விரைவில் இலங்கைக்கு வரவேண்டும்

## ஜெய்சங்கரிடம் அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மிக விரைவில் இலங்கைக்கு வருகை தர வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச் செய்தியை ஜனாதிபதியிடம் கையளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்திய- இலங்கை உறவுகளைப் பல்வேறு துறைகளூடாக பலப்படுத்திக் கொள்வது குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.அதனையடுத்து வெகு விரைவில் இந்தியாவுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவுக்குக் கூறியதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு வருகை தர வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (6)

# கவர்ச்சி அரசியலுக்குள் சிக்கி விடாதீர்கள்

## அருட்தந்தை மா.சக்திவேல்

(வவுனியா)

தமிழர் தேசியத்தை முள்வேலிக்குள் தள்ளி கொலை செய்ய எடுக்கும் முயற்சியை தகர்த்தெறிய வேண்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட் தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் தெற்கு அரசியலில் மாற்றம் என்பது தற்போது கவர்ச்சி அரசியலாகி மக்கள் மயப்படுத்தபட்டு வருகின்றது. எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் அது மேலும் கவர்ச்சியாகலாம்.

இந்த அரசியல் கலாசாரத்திற்குள் வடகிழக்கின் புத்தி ஜீவிகளாகவும், கல்வியாளர்களாகவும் கருதப்படுவோரும் இழுத்துச் செல்லப்படும் அபாயமும் நிலவுகின்றது.

அரசியல் பன்முகம் கொண்ட இராவண கூட்டம் தமிழர் தேசியத்தை சிதைத்தழிக்க அணிவகுத்து நிற்கையில் விட்டில் பூச்சிகளாக தமிழர்கள் அதில் விழுந்து விடக்கூடாது.

தேசிய அரசியல் முகமூடி கொள்ளையர்களிடம் தப்பித்தால் மட்டுமே எமது அரசியல் கௌரவத்தை தற்காத்துக் கொள்ளலாம். இல்லையேல் இனமாக எழ முடியாத சூழல் ஏற்படுவதே பலரது நோக்கம். அதனை தோல்வியுறச் செய்வோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-299)

# பிரதமருக்கு வாழ்த்து

## தெரிவித்த அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அமைதியான மற்றும் ஜனநாயகத் தேர்தலை நடத்தி, சுமுகமான ஆட்சி மாற்றத்தை உறுதி செய்ததற்காக இலங்கையைப் பாராட்டுவதாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரு நாடுகளும் கல்வி, பெண்களை வலுவூட்டுதல், சிறுவர் சுகாதாரம், சுதேச வாசிகளுக்கான பன்மொழி மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பல முக்கிய துறைகள் குறித்தும் வீட்டு மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டன.

முதலீட்டை ஈர்ப்பதற்காக இலங்கையில் பொருளாதார வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், வினைத்திறனை மேம்படுத்த வரி சேகரிப்பு முறைகளை சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.(6)

## மகனின் பெறுபேறு;

### மாரடைப்பால் மரணித்த தந்தை

(கொழும்பு)

விபத்தில் உயிரிழந்த தனது மகனின் சிறந்த சாதாரண தரப் பெறுபேற்றைப் பார்த்து வேதனையடைந்த தந்தை ஒருவர் மாரடைப்பி னால் உயிரிழந்துள்ள சம் பவம் நீர்கொழும்பு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்த மாணவன் நீர்கொழும்பில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் கல்விகற்று சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி யிருந்த நிலையில், பரீட்சைகள் முடிவடைந்து இரு நாட்களின் பின்னர் விபத் தொன்றில் உயிரிழந்துள்ளார்.

இந்தநிலையில், கடந்த 28 ஆம் திகதி வெளியான கல்விப் பொதுத் தராதர சாதார ணப் பரீட்சை பெறுபேறுகளின் படி குறித்த மாணவன் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்.

இதனை அடுத்து மகனின் பெறுபேறுகளை அறிந்து வேதனையடைந்த தந்தை திடீரென மாரடைப்பு ஏற்பட்டு நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6)

## அனுமதிப்பத்திரமின்றி இறைச்சி விற்பனை

# ஒருவர் கைது

(தம்புள்ள)

தம்புள்ள நிக்கவட்ட வன பிரதேசத்தில் பல வருடங்களாக அனுமதிப்பத்திரமின்றி மாடுகள் மற்றும் கால்நடைகளை கொன்று இறைச்சியாக்கி விற்பனை செய்து வந்த வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக தம் புள்ள பொலிஸார் தெரி வித்தனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது, மாட்டிறைச்சி கடைக்கு அருகில் உள்ள களஞ்சிய சாலை அறையில்குளிர்சாதனப் பெட்டிகளில் இருந்து மூவாயிரம் கிலோவுக்கும் அதிகமான மாட்டிறைச்சி மீட்கப்பட்டுள்ளதாக தம் புள்ள பொலிஸார் தெரிவித்தனர். (6)



கம்பர் மலை கலாவாணி சனசமூக நிலையத்தில் முதியோரினைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று சனசமூக முன்றலில் இடம்பெற்றது. (படம்:மகாலிங்கம்)



முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயத்தில் முத்தமிழ் விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது மாணவர்கள் கலைநிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. (படம்: கிருஷ்ணகுமார்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 140 | 200 | 120-170 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 180 | 280 | 200-300 | 400 |
| தக்காளி | 300 | 300 | 280 | 200 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 280 | 200 | 150-200 | 200 |
| கோவா | 250 | 300 | 280 | 240 | 300 |
| கரட் | 200 | 250 | 250 | 200 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 120 | 100 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 320 | 200 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 500 | 450 | 350 | 500-600 | 400 |
| வெண்டக்காய் | 200 | 150 | 100 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 400 | 400 | 350-400 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 180 | 150 | 200 |
| கறிமிளகாய் | 400 | 500 | 600 | 360 | 500 |
| முருங்கைக்காய் | 600 | 350 | 400 | 250-300 | 250 |
| போஞ்சி | 400 | 450 | 550 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 160 | - | 120 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 400 | 450 | 400-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 160 | 80-160 | 100-150 |
| இராசவள்ளி | -- | 800 | 800 | 620 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 80 | -- | 100 | -- | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

மைப்புக்களை மேற்கொள்ள எதிர்பார்க் கின்றோம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று முற்பகல் நாராஹேன்பிட்டியில் அமைந்திருக்கும் ராமண்ய பீடத்திற்கு சென்று இலங்கை ராமண்ய பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. மகுலேவே விமலநாயக்க தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

அதனையடுத்து ஜனாதிபதி தற்போதைய பொருளாதார அரசியல் நிலைமைகள் குறித்து மகா சங்கத்தின ருக்கு எடுத்துக்கூறும் வகையில் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப் பிடப்பட்டவாறு தீர்மானங்களை எடுப் பதே தமது நோக்கமாகும் எனச் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி அநுர குமார, எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் உரிய மறுசீரமைப்புக்களை செய்ய எதிர் பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். (ம-7)

## ஜனவரி...

தகவல்கள் வெளியாகியுள்ளன.

வாகனங்களை இறக்குமதி செய் வதற்கு அரசாங்கம் தீர்மானங்களை எடுத்து வருவதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் (VIAL) தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே தெரிவித்துள்ளார்.

வாகனங்களை இறக்குமதி செய் யும்போது வரி அதிகரிப்பு குறித்த வதந்திகள் குறித்து கருத்துத் தெரிவித்த அவர், இறக்குமதி வரியை அதிகரிப் பது குறித்து வெளியாகும் தகவல் களில் உண்மையில்லை என்றார்.(ம-7)

## விபரீத...

இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த அபிசன் (வயது-14) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-7)

## முன்னணி...

தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட் பாளர்கள் வேட்புமனுவில் கையொப்ப மிட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் கொக்குவில் பகுதியில் உள்ள தலைமை அலுவலகத்தில் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் வேட் பாளர்கள் வேட்புமனுவில் கையெழுத் திட்டனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிர ஸின் சைக்கிள் சின்னத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடு கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தண்ணீர்...

போத்தல் ஒன்றை 70 ரூபாவிற்கு விற் பனை செய்ய முடியும் என மத்திய மாகாண இயற்கை கனிய நீர் உற்பத்தி யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அந்தச் சங்கத்தின் அழைப்பாளர் சபுமல் குமார இதனைத் தெரிவித்தார்.

இதன்படி தண்ணீர் போத்தல் களுக்கு உடனடியாகக் கட்டுப்பாட்டு விலையை விதிக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.(ம-7)

## புதிய...

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க நேற்று வெள்ளவத்தை, அமர புர பீடத்திற்குச் சென்று இலங்கை அமரபுர பீடத்தின் பதில் மகாநாயக்க தேரர் வண. கரகொட உயன்கொட மைத்திரிமூர்த்தி தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

மகாநாயக்க தேரரிடம் கலந்துரை யாடிய ஜனாதிபதி,

சம்பிரதாய அரசியல் முறை மாற் றப்பட வேண்டும் என்பது ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் ஊடாகத் தெரிய வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

இதன்போது புதிய அரசியலமைப்பு குறித்தும் மகா சங்கத்தினர் ஜனாதிபதி யிடம் வினவினர்.

அதன்படி, புதிய அரசியலமைப் பொன்று கொண்டுவரப்பட வேண்டும் என்பதே தமது நோக்கமாகும் என்றும், நீண்ட கலந்துரையாடல்கள் மற்றும் பொதுமக்கள் வாக்கெடுப்பின் ஊடாக மாத்திரமே அதனைச் செய்ய எதிர் பார்த்திருப்பதாகவும், கடந்த அரசாங் கங்கள் அரசியலமைப்புத்திருத்தங்களை தமது தேவைகளுக்கேற்பவே செய்து கொண்டதாகவும், மக்களின் தேவைக்கு ஏற்ப திருத்தங்கள் செய்யப்படவில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டை ஓரளவு ஸ்திரப்படுத்தி மக்கள் எதிர்பார்ப்புக்கு அமைவாக புதிய அரசியலமைப் பொன்றை கொண்டுவர எதிர்பார்ப்ப தாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித் தார். (ம-7)

## பெண் வேட்பாளர்...

மாக உள்ளது என தமிழரசுக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்றுச் சனிக்கிழமை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனக் குழு வவுனியாவில் கூடிய நிலையில் அதன் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

தேர்தலில் போட்டியிட பெண்கள் பல இடங்களில் முன்வரவில்லை. பள் ளம் மேடு காடு எங்கு தேடியும் பெண் கள் கிடைக்காமல் இருக்கிறார்கள். பெண்கள் பல குறைபாடுகளைக் கூறு கின்றார்கள். அவர்களுக்கான நிய மனங்களை நாங்கள் கொடுப்பதில்லை என்று. ஆனால் நாங்கள் அவர்களுக் குச் சந்தர்ப்பத்தை வழங்கத் தயாராக இருக்கின்றபோதிலும் வராத ஒரு சூழ் நிலை இருக்கின்றது.

எனவே பெண் களுக்கும் பெண் கள் அமைப்பு களுக்கும் ஒரு விசேட கோரிக் கையாக நாங்கள் முன் வைக்கின் றோம். தேர்தலில் வெல்லக் கூடிய எங்களோடு சேர் ந்து பயணிக்கக் கூடியபெண்களைத் தயவு செய்து முன் மொழிவியுங்கள் என்றார். (ம-7,250)

## மறு...

பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனி வாசன் தலைமை யில் நாணய நிதி யத்தின் இலங் கைக்கான செயற் றிட்டப் பிர தானி பீற்றர் ப்ரூவர் முதலான அதி காரிகள் குழுவி னர் கடந்த புதன் கிழமை இலங்கை வருகை தந்தி ருந்தனர்.

இதன்போது அவர்கள் ஜனாதி பதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீர சிங்க, உள்ளடங் கலாகப் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந் துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர்.

இச்சந்திப்புக்களின் முடிவில் அறிக்கையொன்றை வெளியிட்டிருக் கும் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன், மறுசீர மைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் அரசாங் கம் அர்ப்பணிப்புடன் இருப்பதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகவும், இலங்கை அதன் பொருளாதார மறுசீரமைப்பு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அவசியமான முழுமையான ஒத்து ழைப்பை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்ப தாகவும் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் தெரி வித்திருக்கிறார். (ம-7)

## சிறீதரனும்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக்கூட்டம் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

மேற்படிக் கூட்டத்திலேயே இத்தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுமந்திரன் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் தீர்மானத்துக்கு மாறாக வேறு ஒரு வேட்பாளரை சிறீதரன் ஆத ரித்தமையால் அவர் தேர்தலில் போட்டி யிடக்கூடாது அல்லது அவரே ஒதுங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

என்றாலும் கட்சியின் நிறைவேற் றுக்குழு உறுப்பினர்கள் எம் இருவரை யும் போட்டியிடுமாறு கோரினர். அதன் பிரகாரம் நானும் சிறீதரனும் யாழ்.தேர் தல் மாவட்டத்தில் போட்டியிடுவோம் எனவும் சுமந்திரன் கூறினார். (ம-7,250)


மஹஜன சம்பத
திகதி 2024.10.05
சீட்டிழுப்பு இலக்கம் 5616
J 4 6 6 2 8 0
அத சம்பத
J 6 2 8 0
சீட்டிழுப்பு இலக்கம் 191

தன நிதானய
திகதி - 2024.10.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1646
V 11 16 34 73 V
09424

மெகா பவர்
திகதி 05/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1964
F 08 16 22 43 59
55178

லக்சி 7 VIP
திகதி 2024.10.05
சீட்டிழுப்பு இலக்கம் 0442
W 9 7 7 3 5 1 W

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3858
சீட்டிழுப்பு திகதி 05.10.2024
W 05 11 21 55
W 97110

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.05
சீட்டிழுப்பு இலக்கம் 925
மிதுனம் 16 19 31 58 மிதுனம்
78267 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.10.2024 324 நீலம்
D 4 6 7 0 5 5
56465
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,236,472.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2590 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 05.10.2024 தினம் சனிக்கிழமை
14 27 65 70 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,391,645.60

சனிதா
திகதி 2024.10.05 வெற்றி வாரம் 4751 வர்ணம் இளம் பச்சை
30 65 69 71 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,096,274.80
84651

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4302 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.10.05 தினம் சனிக்கிழமை
07 10 36 44 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,714,806.80
142532

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 06 36 41 48 56
1766 சிவப்பு 05.10.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 548,731,552.20

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2416
சீட்டிழுப்பு திகதி : 2024.10.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,115,339.20
01 05 20 40 W
961802


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்

### அலுவலக எழுதுனர் தேவை

மேற்படி ஆலய அலுவலகத்திற்கு எழுதுனர் ஒருவர் தேவைப்படுவதால் பொருத்தமானவர்கள் ஆலய நிர்வாக சபையுடன் தொடர்பு கொள்ளவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

செயலாளர்,
ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்,
கொக்குவில்.

**T.P : 077 763 9312** (2223)

---

### யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 9000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (404)

**APEX TRAVELS**
**0777 597 598, 076 3333 644**
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

---

### காணி தேவை

பூநகரி, வவுனியா, மன்னார் பகுதிகளில் காணி தேவை.

தொடர்புகளுக்கு :
**077 374 4652** (2226)

---

## கணக்கீடு

வடக்கின் முதற்தர கணக்கீட்டு ஆசிரியர்
திரு.க.பா.பாலகஜன்(SLTS)

KBK ACCOUNTING

KBK- கந்தர்மடம் (பலாலி வீதி)
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்

### A/L 2026 புதிய பிரிவுகள்

தமிழ் மொழி மூலம்
திங்கள் - 04.30-05.30pm
புதன் - 04.30-06.00pm

English Medium
Mon - 05.30 - 06.45pm
Wed - 03.00 - 04.30pm

ஆரம்பம் : 07.10.2024 திங்கள் மாலை 4.30

A/L 2025 மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**-077 452 0043** (C-1342)

---

### மோட்டார்சைக்கிள் விற்பனைக்கு

Bajaj Discover - WOXXXX Motor Bike உடன் விற்பனைக்குண்டு.

**077 959 9022** (2208)

---

### வீடு வாடகைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் வீடு வாடகைக்கு விடப்படும். மேல் மாடி வீடு 3 பேர் அடங்கிய சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தரகர் தொடர்பு வேண்டாம்.

தொடர்புகளுக்கு :
**076 2197 471** (2196)

---

### Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)

(C-1343) **CIMS College**
49A, Chapel Street, Jaffna.

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

---

### V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1343)

---

### வாடகைக்கு

K.K.S வீதி இணுவிலில் அமைந்துள்ள R.M Mobile Shop வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:
**077 606 8472** (2218)

---

### வாடகைக்கு

இராச பாதை வீதியில் 10 மாணவர்கள் தங்கி நிற்பதற்குரிய அறைகள் வாடகைக்கு உண்டு. (பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும்)

**077 930 9738** (2224)

---

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 277/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg றவை | - 283/= | |
| 1Kg அவல் | - 268/= | |
| 1Kg சக்கரை | - 268/= | |
| 1Kg கடலை | - 550/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 222/= | |
| 01 மங்களம் ஊதுபத்தி | - 160/= | ~~200/=~~ |
| 01 சன் பப்படம் | - 190/= | ~~225/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~165/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3400/= | ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= | ~~80/=~~ |
| 1Kg கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |

**400g Anchor**
1000/=



~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (404)

**Happy Supermarket**
**0777 8080 30**

---


## ஈழத்து சித்தர்கள் சித்தம்

தொகுப்பு : ஆத்மஞான பூரணர்

### நூல் வெளியீட்டு விழா

இடம் : பூரண நிலையம், பலாலி வீதி, யாழ். ஊரெழு
காலம் : 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

நிகழ்ச்சிகள் :
மேலைத்தேயத்தவர்களின் தமிழ் பஜனை
புத்தக வெளியீடு
ஆன்மீக உரை
நூல் வழங்கல் (இலவசம்)




தொடர்புகளுக்கு :
**076 710 0000, 077 431 1743** (2209)

---

## X MARD

விசேட விலைக் கழிவு
ஞாயிற்றுக்கிழமை 06.10.2024

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs.379 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 999.00 Anchor 400g | Rs.249.00 ~~300~~ Fems 8 Pcs | Rs. 59.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1799.00 ~~2000~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2589.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 299.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1180~~ Anchor Plus |
| Rs. 149.00 ~~175~~ Santoor Soap | Rs. 439.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 379.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3499.00 ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |

Call For Information ... 345
மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும் வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்) 138, கே.கே.எஸ். வீதி. (C-1329)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org